ராஜாஜி மணிவாசகம்

கட்டுரைத்தொகுதி

பாரதி பதிப்பகம்

தியாகராய நகரம் :: சென்னை-17.

ஐந்தாம் பதிப்பு ஜூன் 1956.

விலை
ரூ. 1-8-0

அச்சிட்டோர் :
ஜீவோதயம் அச்சகம்,
197, திருவல்லிக்கேணி ஹை ரோடு
சென்னை-5.

அறிவிற்கு ஒரு சக்கரவர்த்தி

சென்ற 28 ஆண்டுகளுககு முனபு ஒருநாள் ஒரு தேச பக்தரை போலீசார கைது செயது மோட்டார் காரில் வேலூா சிறைசசாலைககுக கொணடு வநதார்கள. அவர் தனனுடைய சிறு பையில ஒருகுயா கடுதாசியும், பெனசில் களும் ஒரு பட்டுணடன பேனாவும, பேனாவுககாக "ஸ்வான்" மையும, படிபபதறகாக கிருஸதுவ வேதம, ஷேகஸ்பியர் நாடகஙகள, தாயுமானவா பாடல்கள், மகாபாரதத தமிழ் மொழி பெயாபபு, பி. ஸி. ராய் எழுதியுளள மகாபாரதஙகள் ஏழு பாகஙகள, ராபினசன குருஸோ முதலிய புததகஙகளை யும வைததிருநதாா.

அவரைச சிறைசசாலை அதிகாரி பரிசோதித்து விட்டு அவரைப பறறிய "சரிததிர அட்டையில" எலலாம் விபரமாக எழுதி அவரிடம கொடுததார்.

தேசபகதா அதை படிததுப் பார்த்தார்; முகத்தில் புன்னகை அரும்பிறறு.

மேறபடி சரிததிர அட்டையில் கீழககண்ட விஷயங்கள் எழுதியிருநதன :—

அரசியல கைதி

வந்த தேதி 21-12-21.

அப்பீல் செயய மறுதது விட்ட தேதி 24-12-21

பெயர்.....................

இந்திய தேசீய காஙகிரஸின் பொதுக்காரியதரிசி

கலவி நிலை' ஸி.

"ஸி" என்பதன் பொருள் எழுத்து வாசனையில்லை என்பதாகும! இபபடி "எழுத்து வாசனை இல்லாதவர்

என்று 1921-ல் ஒரு சிறை அதிகாரியால் மதிக்கப்பட்டவர் யார் தெரியுமா?

அவர்தான் இன்று உலகத்தாரால் "அறிவிற்கு ஒரு சக்கரவர்த்தி" என்று கொண்டாடப்பெற்று இந்தியாவின் மணி மகுடம் தாங்கி நின்ற நமது கவர்னர் ஜெனரல் ராஜாஜியாவார்.

1921-ல் சிறைச்சாலைக் கைதி—1949-ல் கவர்னர் ஜெனரல்!

1921-ல் "எழுத்து வாசனை இல்லாதவர்" என்று சிறை அதிகாரியால் மதிக்கப்பட்டவர் இன்று அறிவின் சிகரம்!

கால மாற்றத்தின் விசித்திரத்தையும், கடவுளின் அருளையும் நினைத்தால் ஆச்சரியமே!

ஆனால் ராஜாஜி "அறிவிற்கு ஒரு சக்கரவர்த்தி" என்பதும், மிக மிக முற்போக்கான கொள்கையுடைய பெரிய சீர்திருத்தவாதி என்பதும் இன்று—நேற்று தான் என்று இளைஞர்கள் எண்ணிவிடலாகாது என்பதற்கு இந்நூல் ஒரு சான்றாகும்.

சென்ற இருபது ஆண்டுகளுக்கு முன்பே அவர் எவ்வளவு தீர்க்க தரிசனத்துடன் விஷயங்களைச் சொல்லியிருக்கிறார் என்பதை இந்நூல் விளக்கும். ஆம், இந்நூலில் அடங்கியிருக்கும் கருத்துக்கள் சென்ற 20 ஆண்டுகளுக்கு முன் ராஜாஜி சொல்லியவைகளாகும்.

நமது இளைஞர்கள், சமயத்தைப்பற்றியும், சீர்திருத்தத்தைப் பற்றியும், சத்யாக்கிரகத்தைப் பற்றியும் ராஜாஜி உபதேசம் செய்த பல அருமையான விஷயங்களை இந்நூலின் மூலம் கற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விஷயமும் மணிமணியாக இருப்பதால் தான் இந்நூலுக்கு "**ராஜாஜி மணிவாசகம்**" என்று பெயர் சூட்டியிருக்கிறது. இந்நூலை வெளியிட அனுமதியளித்த ராஜாஜி அவர்களுக்கு நன்றி.

ராஜாஜி மணிவாசகம்

அக்டோபர் இரண்டாந் தேதி

★

இன்று நமது மகாத்மாவுக்குப் பிறந்த நாள். இப்பொழுது நாம் அந்தப் பிறந்த தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அவரை அறிந்தவர்களெல்லோரும் உலகப் பெரியோர்களில் ஒருவராகக் கருதுகிறார்கள். எந்த விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் அதைக் கடவுள் வணக்கமாகச் செய்து விடுகிறது என்று ஹிந்து மதத்தைக் குறித்து நம்மில் பலர் குறை கூறுகிறார்கள். நம்முடைய ஜீவிய காலத்திலேயே மகாத்மா காந்தியடிகளுடைய கொள்கைகளைப் பீடத்திலேற்றி வைத்து மதச் சடங்குகளுடன் பூஜை செய்ய ஆரம்பித்துவிட்டோம். நூல் நூற்பது எப்படி என்பது தெரியாதவர்கள் கதரைப் பற்றியும், கைராட்டினத்தைப் பற்றியும் பாடல்கள் இயற்றுகிறார்கள். இத்தகைய பூஜை நம்முடைய காலத்திலேயே ஆரம்பித்துவிட்டதைக் காணும்பொழுது, நம்முடைய காலத்திற்குப் பின்னால் எவ்விதம் நடக்குமென்பதை நாம் எளிதில் அறிந்துகொள்ளலாம். ஆதலால் ஆரம்பத்திலிருந்தே நாம் உண்மையைவிட்டு விலகாமலிருக்க முயல வேண்டும். காந்தியடிகள் எதைச் செய்யும்படி நமக்குக் கட்டளை இட்டாரோ அதைச் செய்ய முயல வேண்டும். அவர் சொல்வதை அறிந்துகொள்வது எளிது. சுயராஜ்யத்தை அறிந்துகொள்வதற்கான வழியை அவர் காட்டியிருக்கிறார், அந்த வழியில் செல்வது நமது கடமை.

என்னைப்பற்றி சில விஷயங்களை கூற விரும்புகின்றேன் சுதந்திரம் பெறுவதற்கு ஆயுதமேந்திய புரட்சி செய்வதைத் தவிர வேறு வழி கிடையாது என்றே நான் அரசியல் வாழ்க்கையில் புகுந்தபொழுது எண்ணினேன். என்னைப் போலவே தான் அந்தக் காலத்திலிருந்த அறிஞர்கள் எல்லோரும் எண்ணினார்கள் ஆனால் போர்முறை அதிகமாக முன்னேற்றம் அடைந்து விட்டபடியால் அதைக் கையாளுவது என்பது அசாத்தியமான காரியம் என்பதையும் நாங்கள் உணர்ந்திருந்தோம் ஆகவே போர் தொடுத்து சுதந்திரம் பெறமுடியாது என்பதை உணர்வே நாங்கள் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்றோம்

அந்தச் சமயத்தில் வெடிகுண்டு செய்யும் வித்தை இந்திய நாட்டுக்கு வந்து சேர்ந்தது. அதை எறிவது என்பதை போர் செய்வது என்று கூற முடியாது வெறும் பயமுறுத்தல் முறையே தவிர வேறன்று ரகசிய சங்கங்களை அமைத்து, வெடிகுண்டுகள் தயாரித்து இருபது முப்பது நபர்கள் மீது எறிந்து, கொன்று அதன் மூலம் அரசாங்கத்தைப் பயமுறுத்திவிட்டால் அன்னியர்கள் நாட்டைவிட்டு ஓடிவிடுவார்கள் என்று நம்பினார்கள், ஆனால் இரண்டொரு வெள்ளையர் இறந்து போவதால் சுதந்திர காரியம் சித்தியாகப் போவதில்லை என்பதை மக்கள் வெகு சீக்கிரத்தில் அறிந்து கொண்டார்கள் இருபது, முப்பது நபர்களைக் கொன்று விட்டால்கூட அவர்கள் ஸ்தானங்களை வகிக்க ஏராளமான வெள்ளையர்கள் வரத் தயங்கமாட்டார்கள் அப்படி வருகிறவர்கள் அதிக மன உறுதியும் பழி வாங்கும் தன்மையும் படைத்தவர்களாக இருப்பார்கள் இதை உணர்ந்ததும் மக்கள் என்ன செய்வது என்று வழி தோன்றாமல் அப்படியே ஸ்தம்பித்துப் போய் விட்டார்கள்.

ஒருநாள் நண்பர் ஒருவர் வீட்டில் கழிவு காகிதங்கள் போடும் கூடையில் ஒரு சிறு புஸ்தகத்தைக் கண்டேன் அது தோரோ என்னும் அமெரிக்கர் எழுதிய "சாத்வீகச் சட்டமறுப்பு" என்னும்

நூலாக இருந்தது அதைப படித்தேன், வெகு சுவையுடையதாக இருந்தது என கணகள திறககபபட்டன. அதே சமயததில மகாதமா காநதியடிகள தென ஆபபிரிககாவில செயதுவநத காரியஙகள பததிரிகைககளில வெளிவரலாயின, அவா தோரோவின தததுவஙகளையும, டாலஸடாயின தததுவஙகளையும் இநதியஅரசிய லில எபபடிக கையாளலாம எனனும முறையைக கணடு பிடித்து விட்டார் நாம சமமதிககாவிடடால அனனியா நமமை ஆள முடியாது எனனும உணமையை அவா கணடு பிடிததுவிட்டார். நாம சமமதிககமாடடோம எனறு சொலலிவிட்டால அநதக கணமே அரசாஙகம முறிநதுபோக வேணடியதே யாகும தென ஆபபிரிககாவில அவா நடததிய போராடடததைப பறறி வாசித ததும அதே ஆயுததைதை ஏநதினால இநதியாவும வெற்றி பெறறு விடலாம எனபதை உணாநதோம.

ஒரு சமயம் நான காநபூரில நடைபெறற ஒரு மகாநாட்டுக் குப போயிருநதேன அபபோது தென ஆபபிரிககாவிலிருநது நாடு கடததபபட்டிருநதவாகளில பலா வநதிருநதாாகள அவாகளுககு இநத நாட்டில வீடு வாசல கிடையாது, பிழைகக வழியும கிடை யாது தென ஆபபிரிககப போராடடததிறகு ஆதரவு தேடும பொருட்டு அவாகள இநதியா முழுவதும சுறறுபபிரயாணம செய தாாகள நான காநபூரில அவாகளில ஒருவருடன பேசிக கொண டிருநதேன் மகாதமாஜி ஒரு நூல எழுதியிருபபதாகவும அநதப் புஸ்தகததை வெளியிடுவதைத தென ஆபபிரிகக அரசாஙகம தடுத திருபபதாகவும சொனனார். பினனா அவா அநதசசிறு நூலின பிரதி யொனறை எனககு அனுபபிவைததாா நான அதை மிகுநத ஆவ லோடு வாசிததேன அது மறுபடியும வெளியிடபபட்டிருககிறது. எஙகும கிடைககும அநத நூலை மகாதமாஜி கோகலேயிடம காட்டினார், கோகலே அதைப படிதது முடிநததும, கோகலேயிடம் மகாதமாஜி அதைப பறறித தஙகள கருதது யாது என்று கேட்டா ராம். கோகலே உடனே, "என கருததா, அதை உடனே அராபிக் கடலில எறிந்துவிட வேண்டும்" எனறு கூறினாராம், இந்த விப

ரத்தை மகாதமாவே எனனிடம கூறினுர். மகாதமாஜிக்கு உதவி செய்வதற்காகவே கோகலே தென ஆபபிரிககாவுககுப போயிருந்தாா. மகாதமாஜியும அவரைக குருவாகவே கொண்டாடினுர். "இது நலல புஸதகமதான, ஆனுல இககாலத்துககு உபயோகப படாது" எனபது அவருடைய அபிபபிராயம அதறகுக காரணம அவா தறகால நவீன நாகரிகததிலும முனனேறறததிலும யநதிரஙகள முதலிய சாதனஙகளிலும நமபிககை பெறறிருநததுதான. ஆனுல அந்த நூலோ "போதும இநத நாகரீகம, முனபோல எளிய வாழககை வாழவதே சுகம தரும" எனறு கூறுவதாயிருந்தது.

மகாதமா காநதியடிகள இநதத தமது "ஹிநத ஸவராஜ" என்னும சிறிய நூலை வெளியிடட சமயததிலதான தென ஆபபிரிககாவில தமது சாதவீகப போரை நடததிககொணடிருநதாா. அவா அதை முறறிலும அஹிமசா முறையிலேயே நடததினுா. அபபோது இநதியாவில வெடி குணடு எறிவதிலும சதியாலோசனைச் சஙகஙகள அமைபபதிலும ஈடுபடடிருநத புரட்சிககாரர்கள மகாதமா சுமமா உலகை ஏமாறறிக கொணடிருககிறுா, அவரும வெகு சீககிரததில நமமுடைய கடசியில வநது சோநதுகொளவாா எனறு எணணினுாகள. இநதப புரடசிக கட்சி இநதியாவில மடடுமினறி ஐரோபபாவிலும அமெரிக்காவிலும வேலை செயது கொணடிருநதது. அநதக கடசியாா எபபொழுதும காநதியடிகளைத தஙகளில ஒருவராகவே கருதி வநதாாகள, அவா தஙகளுடன சோந்து தலைமை தாஙகும காலததை எதிாபாாததுக் கொணடிருந்தார்கள. இவாகளுடைய இநத எணணததுககுக் காரணம யாது?

மிதவாதத தலைவாகள கோழைகளாா யிருநதாாகள. காந்தியடிகளோ எதைப பேசினுலும எதைச செயதாலும அச்சமினமையே பிரதானமாக விளஙகிறறு, அவா ஆஙகிலேயரை உயர்நதவாகளாகக கருதவிலலை. அததுடன அசசமிலலாமல அவாகளை எதிாக்க வேணடும எனறும சொனனுர். அதனுல புரட்சிக கட்சி

யார் "ஆகா, இத்தலைவர்தான் நமக்குத் தேவை" என்று தங்களுக்குள் கூறிக் கொண்டார்கள் மிதவாதிகள் அவர்களை தேசத்தின் விரோதிகள் என்று கண்டித்தார்கள் ஆனால் காந்தியடிகளோ எப்போதும் அவர்களுடைய தேச பக்தியையும் தைரியத்தையும் பாராட்டினார். ஆதலால் அவர்கள் "நம்மை அறிபவர் இவர்தான். இறுதியில் நம்முடன் வந்து சேர்ந்துகொள்ளவே செய்வார்' என்று எண்ணினார்கள்

இந்த மாதிரிதான் அவர்கள் எண்ணிக் கொண்டிருந்தார்கள் என்பதற்கு ஒரு சிறு உதாரணம் கூறுகிறேன் 1912-ம் வருஷத்தில் ஒரு நபர் இந்தியாவுக்கு வந்தார் அவர் தம்முடைய நண்பர் ஒருவருடன் சேலத்துக்கும் வந்தார் அவர் அப்போது ஒரு சிறு வாலிபர் அவரை நான் சந்தித்தேன் வந்த நபருக்கு லண்டன் நகரிலிருந்த சில இந்திய புரட்சிக்காரர்களுடைய பழக்கமுண்டு. நாங்கள் அரசியல் விஷயங்களைப் பற்றியும் புரட்சிக்காரர்களுக்கு வெற்றி கிடைக்குமா என்னும் விஷயத்தைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தோம் எங்களுடனிருந்தவர் ஒருவர் "இனி அவர்கள் பாடு தீர்ந்ததுதான் அவர்கள் அனைவரையும் நசுக்கி விட்டார்களே" என்று சொன்னார் அதற்கு உடனே அந்த நபர் "அப்படி எண்ணவேண்டாம் காந்தியடிகள் இந்தியாவுக்கு வந்து சேரும் வரை பொறுத்துப் பாருங்கள்" என்று கூறினார் நானும்கூட அப்போழுது அவ்விதம் எண்ணவில்லை என்று கூற முடியாது ஹிம்சையை உபயோகிப்பது தவறு என்பதில் எனக்கு அப்போழுது உறுதியான நம்பிக்கை உண்டாகவில்லை காந்தியடிகளையும் புரட்சிக்காரருடன் சேர்ந்துகொள்ளும்படி செய்ய முடியும் என்றே நானும் நம்பினேன்,

அதன் பின்னர் தென் ஆப்பிரிக்காவில் காந்தியடிகள் சிறையில் அனுபவித்தவைகளை "மாடர்ன் ரெவ்யூ" என்னும் மாதச் சஞ்சிகையில் படித்தேன் அவர் தென் ஆப்பிரிக்காவிலிருந்த போது மூன்று தரம் சிறைப்பட்டிருக்கிறார். அவருடைய சிறை

அனுபவங்கள் மிகுந்த சுவையுடையன. அந்தக் காலத்தில் அரசியல் வாதிகளில் அநேகர் அவற்றைப் படிக்கவில்லை. ஆனால் நானோ அவற்றில் என் மனத்தைப் பறி கொடுத்துவிட்டேன். அதனால்தான் நான் பின்னர் என் சொந்தச் செலவில் அந்தக் கட்டுரைகளைத் தமிழ்ப் புத்தகமாகப் பிரசுரித்தேன். ஆனால் அந்தச் சிறை அனுபவங்களைப் படித்த பிறகு இனி காந்தியடிகளை ஹிம்சையைக் கையாளச் செய்வது என்பது முடியாத காரியம் என்பதைத் தெளிவாக உணர்ந்துகொண்டேன்.

இந்தியாவிலிருந்த அரசியல் வாதிகள் அனைவரும் யாதொரு கட்சி பேதமின்றி காந்தியடிகள் தென் ஆப்பிரிக்காவில் நடத்திய போராட்டத்தைப் புகழ்ந்து பாராட்டினார்கள். ஆயினும் காந்தியடிகள் அங்கு கையாண்ட முறைகளை இந்தியாவிலும் கையாளலாம் என்ற நம்பிக்கை மட்டும் அவர்களிடம் கிடையாது. தென் ஆப்பிரிக்காவிலிருந்த ஆங்கிலப் பாதிரியார் டோக் என்பவர் காந்தியடிகளுடைய திவ்ய சரிதையை எழுதியிருக்கிறார். தென் ஆப்பிரிக்கத் தொடர்புடைய பாதிரியார் ஒருவர் சேலத்தில் இருந்தார். அவர் அந்த திவ்ய சரிதையின் பிரதி யொன்றை எனக்குப் படிக்கக் கொடுத்தார். அது மிகுந்த சுவையுடையதாக இருந்தது. மகாத்மாவின் உள்ளக் கருத்து முழுவதையும் தெள்ளத் தெளிய எனக்கு விளக்கிற்று. அதன்பின் என் மனதில் எள்ளளவு சந்தேகம்கூடத் தங்கியிருக்கவில்லை. இப்பொழுது அவரை அறிந்திருப்பதுபோலவே அப்போதும் அவரை அறிந்துகொண்டேன். இறுதியாகப் புரட்சிக் கட்சியாருங்கூட காந்தியடிகள் தங்களை எதிர்ப்பவரேயன்றி தங்களுடன் சேரக்கூடியவரல்லர் என்று உணர்ந்துகொண்டார்கள். ஆகவே நமமுடைய நாட்டு அரசியல் வாதிகள் மூன்று கட்சிகளாகப் பிரிந்து நின்றார்கள். அவை காந்தீயம், புரட்சி வாதம், மிதவாதம்.

காந்தியடிகள் 1913-ம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்ததும் கெயரா, சம்பாரன் என்னும் இரண்டு போராட்டங்களையும் நடத்தித் தம்முடைய முறைகள் இந்தியாவுக்கும் உகந்தவையே என்று தெளிவுபடுத்தினார். அவர் அஹிம்சையை வெற்றி காணக் கூடிய ஒரு ஆயுதமாகவே செய்திருந்தார். அந்தச் சமயத்தில்,

பெஸண்ட் அம்மையார் இந்திய அரசியலில் தலைமை வகிக்கலானார். அப்பொழுது அவர் காந்தியடிகளைப் பற்றிச் சிறிதுகூட லட்சியம் செய்யவில்லை. அவரும்கூடக் காந்தியடிகளுடைய முறைகளை ஹிம்சை முறையாகவே கருதினார். காசியில் சர்வகலா சாலைப் பட்டமளிப்பு விழா நடந்தபோது காந்தியடிகள் வெடிகுண்டு எறியும் தத்துவத்தைப் பற்றிப் பேசினார். வெடிகுண்டு எறிபவரும் நல்ல மனிதரே என்றும் அவரும் தேசத்தினிடம் பக்தியுடையவரே என்றும் அவரும் தேசத்திற்காக உயிரைக் கொடுக்கும் தியாகியே என்றும் கூறினார். புரட்சிக்காரனுடைய நோக்கத்தைக் கூறிவிட்டு, அவருடைய முறையிலுள்ள பிழையை எடுத்துக் கூற விரும்பினார். ஆனால் புரட்சிக்காரரும் தேசபக்தரே என்று காந்தியடிகள் கூறியதும் பெஸண்ட் அம்மையாருக்குக் கோபம் வந்துவிட்டது. உடனே எழுந்து வெளியே போய்விட்டார். அங்கு வந்திருந்த மகாராஜாக்களும் அவருடன் வெளியேறினார்கள். அதன் பின் வெகுநாள் வரை பெஸண்ட் அம்மையாருக்கும் காந்தியடிகளுக்கும் தொடர்பு இல்லாமலேயே போய்விட்டது. அந்தப் பிரசங்கத்திலேயே காந்தியடிகள் மகாராஜாக்கள் அணிந்திருந்த ஆடை ஆபரணங்களைப் பற்றியும் குறிப்பிட்டார். ஜனங்களின் வறுமையைப்பற்றி வர்ணித்தார். தேசம் முழுவதும் அரைப்பட்டினியாயிருக்கும்போது இந்த ராஜாக்கள் பெண்களைப் போல ஆடை ஆபரணங்களை அணிந்துகொண்டு வந்திருக்கிறார்களே என்று சொன்னார். இப்படிச் சொன்னதும், புரட்சிக்காரர்களைப் பற்றிக் குறிப்பிட்டதும்தான் பெஸண்ட் அம்மையாரும் மகாராஜாக்களும் கூட்டத்தை விட்டு வெளியேறியதற்குக் காரணம். ஆனால் காந்தியடிகள் தென் ஆப்பிரிக்காவில் செய்த காரியங்கள் அதிக நலம் வாய்ந்ததாக இருந்தமையால், சென்னை கவர்னர் ஆம்டில் பிரபு பகிரங்கமாகக் காந்தியடிகளைப் பாராட்டிப் பேசினார். அதன் பின்னர் காந்தியடிகளுக்கு "கெய்ஸரி-ஹிந்த" என்னும் பொற்பதக்கம் அரசாங்கத்தாரால் அளிக்கப்பட்டது. அந்தப் பதக்கத்தை அவர் ஒத்துழையாமைக் காலத்தில் அரசாங்கத்தினிடம் கொடுத்துவிட்டார்.

1922-ம் ஆண்டில் வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது அந்தக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளக்கூடாது என்று பகிஷ்காரம் நடத்தப்பட்டதை அறிவீர்கள். சத்தியாக்கிரக முறைகளில் தியாகத்துக்குள்ள சம்பந்தத்தைப் பற்றி ஒரு சமயம் நானும் மகாத்மாஜியும் விவாதித்துக் கொண்டிருந்தோம். அப்போது நான் அவரிடம் "வேல்ஸ் இளவரசர் பகிஷ்கார இயக்கத்தில் தியாகம் என்பதற்கு ஏதேனும் இடமுண்டா? அது வெறும் அரசியல் சூழ்ச்சி மட்டும்தானே" என்று கேட்டேன். அவர் உடனே "அப்படியா எண்ணுகிறீர்கள்? வேல்ஸ் இளவரசரைச் சந்திக்காததால் என் மனம் எப்படி வேதனைப்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியவில்லை. அவமரியாதையாக நடந்து கொள்வதை எண்ணும்பொழுது என் மனத்தில் அதிக வேதனை உண்டாகிறது. அது ஒரு பெரிய தியாகம் அல்லவா?" என்று வெகு உணர்ச்சியுடன் கூறினார். இதிலிருந்து மகாத்மாஜியின் உண்மையான உள்ளத்தை அறிந்துகொள்ளலாம். அவர் உள்ளம் முழுவதும் அன்பால் நிறைந்திருக்கிறது. அவருக்கு இரத்த பேதம் என்பது அணுவளவுகூடக் கிடையாது. ஆங்கிலேயரைப் பற்றி ஏதேனும் கடுமையாக எழுத வேண்டியிருக்கும்பொழுது அவர் தம்முடைய சொந்த சகோதரரைப்பற்றிக் கடுமையாகச் சொல்லும்பொழுது எவ்வளவு வேதனையை அனுபவிப்பாரோ அவ்வளவு வேதனையை அனுபவித்தார்.

தீண்டாமையை ஒழிப்பதே மகாத்மாஜியின் பேரவா. அதையே அனைத்திலும் முக்கியமானதாகக் கருதினார். அவரைப் பின்பற்றுவதாகச் சொல்லுவோர் இந்த விஷயத்தில் அவர் கூறியதை ஒப்புக்கொள்ள முடியாவிட்டால் ஒன்றும் பயனில்லை. இந்த விஷயத்தில் அவர் அனேக விதமான கஷ்டங்களை அனுபவித்திருக்கிறார். தம்முடைய மனைவியிடம்கூடச் சண்டையிட வேண்டியதாக இருந்தது. தீண்டாமையை ஒழிக்கவேண்டும் என்பதை அந்த அம்மையார் ஏற்றுக்கொள்ளவே செய்தார். ஆயினும்

மகாத்மாஜி எவ்வளவு தூரம் அதில் முன்னேறிச் செல்லவேண்டு மென்று விரும்பினாரோ அவ்வளவு தூரம் முன்னேறிச் செல்ல அந்த அம்மையால் முடியவில்லை. அல்லது மகாத்மாஜிதான் அவரைப் பற்றித் தவறாக எண்ணினாரோ என்னவோ? அப்படித் தான் எனக்குத் தோன்றுகிறது. 1915-ம் ஆண்டில் அவர் தென் இந்தியாவுக்கு வந்தார். அப்பொழுது அவர் தம்முடன் தென் ஆப்பிரிக்காவில் உழைத்த ஒரு பஞ்சமருடைய மகனைச் சேர்த்து வைத்துக் கொண்டார். அந்தப் பையனைக் குளிப்பாட்டி அவ னுக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் செய்யுமாறு தமது மனைவி யாரிடம் சொன்னார். வசதிகள் என்ன என்பதை நீங்கள் அறிவீர் கள், அவற்றை எல்லாம் அந்த அம்மையார் வெகு மகிழ்ச்சி யுடன் செய்தார். அந்தப் பையன் மிகச் சிறு பாலகன். அவனை அந்த ரயிலில் தாமுடனேயே கூட்டிக்கொண்டு போனார். அவன் உட்காருமிடத்தை அசுசப்படுத்திவிடுவான். உடனே அம்மை யார் அவனைத் தூக்கிக்கொண்டு போய் தண்ணீர்விட்டுக் கழுவி னார். உட்காருமிடத்தையும் சுத்தம் செய்தார். இந்த மாதிரி எல் லாம் அவர் தமது கணவருடன் ஒத்துழைத்தபோதிலும் சில சமயங்களில் சங்கடங்கள் ஏற்படுவதுண்டு. கணவன்மார் மனைவிமாருடைய கஷ்டங்களை உணர்வதில்லை. அந்தச் சிறுவன் பிறகு காந்தியடிகளை விட்டு ஓடிப்போய்விட்டான். பின்னர் காந்தி யடிகள் குஜராத் பிரதேசத்தைச் சேர்ந்த பஞ்சம சிறுமி ஒருத்தி யைத் தமது குமாரிபோலவே வளர்த்து வந்தார். அந்தச் சிறுமி அதிக துஷ்டத்தனமுள்ளவள். அத்துடன் அவள் பெற்றோரும் நல்லவர்களில்லை. அதனால் அந்தச் சிறுமி காரணமாக காந்தியடிகள் அடிக்கடி உண்ணாவிரதம் இருக்க நேர்ந்தது.

தீண்டாமை என்பது தீண்டாதவர்களைப் பிடித்துள்ள நோயன்று; தீண்டத்தக்கவர்களைப் பிடித்துள்ள நோய் என்பதே காந்தியடிகளுடைய கருத்து. உயர்ந்த ஜாதியாரிடையில்தான் அந்த நோய் காணப்படுகிறது. அதனால் அவர்களுக்குத் தான்

சிகிச்சை செய்யவேண்டும். தீண்டாதவர் என்பவரிடம் தீண்டக் கூடாது என்பது யாதொன்றுமில்லை. நாம் தான் அந்த ஈனத் தன்மான எண்ணத்தால் பிடிக்கப்பட்டிருக்கிறோம் தீண்டாத வரைத் தொட்டால் ஏதோ கெடுதல் ஏற்பட்டுவிடும் என்று நாம் பயப்படுவது தவறு அந்தப் பயத்தை விட்டொழிக்கவேண்டும் ஆதலால் மக்களுக்கு அறிவூட்டி வரவேண்டும் என்று உறுதி செய்து கொண்டால் தீமையை ஒழிப்பது கஷ்டமான காரிய மன்று தீண்டாதவர்களை எல்லாம் முஸ்லிம்களாகவோ கிறிஸ் தவர்களாகவோ செய்துவிட்டால் அவர்களுடைய கஷ்டங்கள் எல்லாம் நீங்கிவிடும் என்று சிலர் எண்ணுகிறார்கள் தீண்டா தவர்கள் அளவு கடந்து கஷ்டப்படுகிறார்கள் அதனால் ஹிந்து மதத்தைத் திருத்தி அவர்களுடைய கஷ்டங்களை நீக்குவது என்பது முடியாத காரியம் என்று எண்ணுகிறார்கள் வடநாட்டிலுள்ள முஸ்லிம்களும் ஹிந்துக்களும் அனுபவிக்கும் கஷ்டங்களைக் கவனிப் போமானால் இந்த விதமான பரிகாரத்தால் பயன் எதுவும் கிடை யாது என்பது விளங்கும் தேசம் முழுவதற்கும் நலமும் சமா தானமும் உண்டாக்குவதே நம்முடைய நோக்கமாக இருக்க வேண்டும் ஆதலால் நாம் உண்மையில் செய்யவேண்டியதெல் லாம் தீண்டாதவர்களிடம் தீண்டாமை என்று ஒன்றுமில்லை நம் முடைய மனதில் தான் அருவருப்பான பயம் ஒன்று இருக்கிறது. அதை நீக்க வேண்டும் அதை எளிதில் நீக்கிவிடலாம் என்று உயர்ந்த ஜாதியார் என்பாரிடம் கூறி அவர்களுடைய மனத்தை மாற்றவேண்டியதே யாகும்

ஜாதிகள்

உலகத்தில் அநேக விதமான மரங்களும் இருக்கின்றன; மிருகங்களும் இருக்கின்றன. அவைகள் எல்லாம் வேறு வேரு னவை. அதேபோல உலகத்திலுள்ள பல தேச மக்களுடைய வழக்கங்களும் வேறு வேருனவை. அவைகள் குறைபாடு உடைய னவாக இருந்தால் அவைகளை நாம் சீர்திருத்தலாம். அவைகள் கேடானவையாயிருப்பினும் அவற்ருல் அடையக் கூடிய பயனை அடைய முயலலாம். பறவையினுடைய சிறகுகளும், மனித னுடைய கைகளும், குதிரையினுடைய வாலும், பசுவினுடைய கொம்பும் எப்படி நன்மை பயப்பனவாகவும் தீமை பயப்பனவாக வும் உளதோ, அப்படியேதான் சமூகப்பழக்க வழக்கங்களும் நன்மை பயப்பனவாகவும் தீமை பயப்பனவாகவும் உள. நாம் கை களுக்குப் பதிலாகச் சிறகுகள் இருந்தால் எவ்வளவு நலமாயிருக் கும் என்று எண்ணலாம். அப்படியே பசுவின் கொம்பும் குதிரை யின் வாலும் இருந்தால் நல்லது என்று எண்ணலாம். ஆனல் அப்படிஎண்ணுவது முற்றிலும் தவறே. நான் கூறுவதை வேறு விதமாகப்பொருள் கொண்டுவிடவேண்டாம். நாம் கூறும் உதா ரணங்களுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் வேறுபாடு உண்டு என்பதை அறிவேன். மனிதன் சிறகை அடையமுடியாது. ஆனல் நாம் நம்முடைய பழக்க வழக்கங்களை மாற்றிக்கொள்ள முடியும். ஆம்; பறவைகளுடைய உடலையும் மிருகங்களுடைய உடலையும் மாற்றமுடியாது. பழக்க வழக்கங்களை மாற்ருதவரை அவற்ருல் நன்மையும் உண்டு; தீமையும் உண்டு. நமக்கு எது இல்லையோ அதற்காக வருந்த வேண்டியதில்லை. பழக்க வழக்கங்களை மாற்ற முயன்றபோதிலும் அப்படி மாற்ற முயலும் காலத்தில் கூட அவற் ருல் அடையக்கூடிய நன்மைகளை அடைய முடியும்.

உதாரணமாக, மேனுட்டார் பலாதகாரத்தை உபயோகிப்பதில பிரியமுடையவர்களா நாமோ அஹிமசா தர்மததை அனுஷ்டிகக விருமபுகிறேம் அவாகள தஙகள முறையால நன்மை அடைய முயலவதுபோல நாம் நம் முறையால நன்மை அடைய முயல வேணடும வேறுபாடுகள எலலாம வேறுபாடுகளே யன்றி, உயாவு தாழவு குறிப்பன அலல எனபதை நாம எபபொழுதும நினைவில வைததுக கொளள வேணடும. உயர்வு தாழவு கற்பியாமலிருநதால எததனை வேறுபாடுகள இருநதாலும நாம கவலைப பட வேண்டியதிலலை.

இநத விஷயததில எனனுடைய கருததைக கூறுகின்றேன் எலலோரும ஒபபுககொளளககூடிய அளவு சரியான கருதது என்று கூறமாடடேன. மகாதமாஜியின கருததும இதுதான எனறும கூறமாடடேன. ஆனால இதுமட்டும நிசசயம மகாதமாஜி இததகைய கருததுககளைப போறுததுககொளளுவார் வாழ்வின சகல துறைகளைபபறறியும மகாதமா கூறும கருததுக்களையே அனுஷ்டிகக வேணடும எனற தவருன கருதது ஒனறு உலவுகிறது நான ஒரு சமயம சுறறுபபிரயாணம செயத காலததில ஒரு ஊரில அனபா ஒருவா எனககு உணவு தர விருமபினா எனககு வேணடாம எனறு கூறினேன எனககுப பசியிலலாவிடடாலும உண்ணவேணடும எனறு வறபுறுததினர் "ஆட்டுபபால வைததிருக்கிறேன, குடிகக வேணடும" எனறு சொனனர் "ஏன நான ஆடடுபபால குடிகக வேணடும?" எனறு கேட்டேன "மகாத்மாஜி ஆட்டுபபாலதானே குடிககிருா?" எனறு அவர் கூறினா. இதுபோல மகாதமா செயவதுபோலவே எலலா விஷயஙகளிலும் செயயவேணடும எனற எணண முடையவாகளாக இருககிருாகள பலர். இதிலிருநது மகாதமாஜிககு நாட்டிலுளள செலவாககு இவவளவு எனறு விளஙகுகிறது கிருஷணனைப பறறியும கோபிமாரைப பறறியும கதை கூறுகிருாகளே, அதுபோல இருககிறது.

பரமபரையாகத தொழில செயது வரும முறை இனிமேலும நீடித்து நிறகும என்று நமப முடியாது. இனிமேலும் தகபபன்

தொழிலேயே மகனும் செய்யவேண்டும் என்று கூற முடியாது அப்படிச் சொல்வது நம்முடைய ஜன சமூகத்துக்கு நல்லதுமில்லை. சிறு வயதிலிருந்தே பயிற்சி பெறவேண்டிய தொழில்களானால், தகப்பன் மகனுக்குச் சிறுவயது முதலே பயிற்சி அளிப்பான் என்பதில் சந்தேகமில்லை ஆயினும் அப்படிப் பயிற்சி அளிப்பது ஜாதிக் கட்டுப்பாட்டாலோ சமயக் கட்டுப்பாட்டாலோ அன்று. அந்த மாதிரியான கட்டுப்பாடுகளால் முற்காலத்தில் நன்மைகள் உண்டாயிருக்கலாம். ஆனால் அந்தக் கட்டுப்பாடுகளை இக்காலத்திலும் வைத்துக்கொண்டிருப்பது என்பது முடியாத காரியம்.

உண்பது என்பதைக் கவனியுங்கள். ஒருவர் பிறருடன் உண்பது தவறு என்று எண்ண இடமில்லை அந்த வேறுபாட்டை நிலை நாட்டுவதால் பயனுமில்லை, சாத்தியமுமில்லை யார் சமைத்தாலும், தொட்டாலும் நான் உண்ண முடியும் யாருடன் உட்கார்ந்தும் உண்ணலாம் சுத்தத்துக்கு இது முரண்பட்டதல்லவா என்று நீங்கள் எண்ணக் கூடும் சுத்தம் பற்றிய விதிகள் வேறு, ஜாதி வேறுபாடு கூறி உண்ண மறுக்கும் விதிகள் வேறு. ஒரு குறிப்பிட்ட மனிதன் எப்போழுதும் அசுத்தமாயிருப்பான் என்று எப்படிச் சொல்ல முடியும்? சிலரை எப்பொழுதுமே ஒதுக்கி வைத்துவிடுவோமானால் அவர்கள் நாளடைவில் அதிக அசுத்தமாகவே ஆகிவிடுவார்கள். இதோ, தோட்டிகள் இருக்கிறார்கள்; அவர்களுடன் பழகவும், அவர்களைத் தொடவும் செய்வோமானால், அவர்கள் தங்கள் தவறான பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ளச் சந்தர்ப்பம் உண்டாகும் ஆதலால் நம்மைவிடச் சுத்தக் குறைவாக உள்ளவர்களுடன் அடிக்கடி பழகுவது நம்முடைய கடமையாகும்.

சீர்திருத்தம் செய்வதானால் மனித அறிவுக்கு ஒத்ததாக இரண்டு வழிகள் உள. ஒன்று கெட்டவர்களைத் தனியாகப் பிரித்து வைப்பது, அதுதான் சிறை செய்யும் முறை மற்றது கெட்டவர்களுடன் சேர்ந்து திருத்துவது. அதுதான் கல்வி முறையின் அஸ்தி

வாரம். தனியாகப் பிரித்து வைக்கும் முறைதான் ஜாதி என்பது. அது இனி மேல் பயன் படாது ஆதலால கலநது வாழதல என னும் மற்ற முறையைக் கையாண்டு பாாகக வேணடும இநதச் சந்தர்பபத்தில் சிலர் கூறுவார்கள், தீண்டாதவர்கள மாமிசப உண் பதால் அவர்களுடன் சேரககூடாது என்று இதறகும பொருள கிடையாது. இவர்களிடம் நாம தாராள மனதுடையவாகளாக நடந்து கொண்டாலதான் அவாகளை 'திருதத முடியும ஒரு பையன னுக்கு ஓடக கற்றுக் கொடுகக விருமபுகிறோம என்று வைதது கொளளுஙகள. அப்பொழுது நாம அவனுககு முனனால ஓடி விட மாட்டோம். அவன் கூடவே ஓட முயனறு அவனுககுக கறபிப போம அது போல தவறான வழககஙகள உடையவாகளைத் திருத துவதற்கும அவாகளை விட்டு விட்டு முனனால போயவிடலாகாது. அபபடிப போவது அனபு முறையாகாது தூரததில நினறு கொண்டு பிறரை நமமிடம வருமபடி செயயலாம எனறு எணணி னால் அது அனுபவததுக்கு ஒதது வராது சுததமாக இருகக அறி யாதவர்களுடன சோநது பழகுவதை நமமுடைய கடமையாக கருதுகிறேன். அபபடி நாம சோநது பழகினால அவாகள வெகு சீககிரத்தில் திருந்தி விடுவாாகள. உயர்தர வாழககை வாழபவாகளுககு இதனால சிறிது தீஙகும நேரிடககூடும ஆனால ஜன சமூகம முனனேறவேண்டுமானால இநதச சிறுதியாகம செயது தீரவேண டியதுதான். ஆதலால உடன உண்ணல எனபதறகு ஆடசேபம எதுவும் இருக்க நியாயமிலலை பல தொழில செயபவாகள தொழில காரணமாக சோந்து உண்ணலாகாது எனறு கூறுவதறகு நியாயம் ஏது? ஆசிரியர் வைததியருடன் உண்ணலாகாது எனறு கூறுவது அசம்பாவிதமானது போலவேதான். பிராமணா அமபட் டருடன் உண்ணலாகாது என்று கூறுவது அசம்பாவிதமாகும். பிராமணர்தான் ஆசிரியர், அம்பட்டர்தான வைததியா. அததுடன அம்பட்டர் தொடுவதைவிட அதிகமான ஆபாசஙகளை வைததியா தொடுகிறார். அப்படி யிருந்தும வைத்தியருடன் உண்ணமாட்டேன் என்று யாரும் கூறுவதில்லை. என் அண்ணன் டாக்டராக இருந்

தால் ஏன் என் தம்பி அம்பட்டராக இருக்கக் கூடாது? அம்பட்டர் பிறருடைய உடம்பில் சில பாகங்களைத் தொட மறுக்கலாம். ஆனால் டாக்டரோ அப்படி மறுக்க முடியாது. டாக்டரைச் சேர்த்துக் கொள்வதானால் அம்பட்டரையும் சேர்த்துக் கொள்ளவேண்டியதே. அதில் ஆட்சேபம் கூறுதல் ஆகாது நம்மை இப்படிப் பிரித்து வைப்பதெல்லாம் நம்முடைய வழக்க பழக்க வாசனையேயன்றி வேறன்று. ஒரு வேளை டாக்டர்கள் பெறுகின்ற பணமானது அவரைச் சுத்தம் செய்து விடுகின்றதோ என்னவோ! அம்பட்டருக்கும் டாக்டருக்குக் கொடுப்பதுபோல அதிகப் பணம் கொடுத்தால் அம்பட்டரையும் சேர்த்துக் கொள்வோமோ என்னவோ!

ஆண்களும் பெண்களும் தாங்கள் விரும்பியபோல் மணம் செய்துகொள்ளச் சுதந்திரம் உடையவர்களாக இருக்கவேண்டும் என்பதே என் உறுதியான நம்பிக்கை இப்படிக் கூறுவதால் சிறுவர்களும் சிறுமிகளும் ஒருவரை யொருவர் கூட்டிக்கொண்டு ஓடிவிடலாம் என்று கூறுவதாக எண்ண வேண்டாம். நான் கூறுவதெல்லாம் கலியாணத்தைத் தீர்மானிக்கும்போது வயதானவர் விருப்பத்துக்கு மதிப்புக்கொடுப்பதைவிட மணமக்களின் விருப்பத்திற்கே அதிக மதிப்புக் கொடுக்கவேண்டும் என்பதேயாகும். அப்படியே தாய் தந்தையர் தீர்மானம் செய்வதாயிருந்தாலும் அவர்கள் ஜாதியைப் பிரதானமாக வைத்துத் தீர்மானம் செய்யக் கூடாது. மணம் என்பதெல்லாம் ஒரு விதமான நட்பு முறையேயன்றி வேறன்று இரண்டு நண்பர்கள் கூட்டுமுறையில் வாழ்க்கை நடத்த விரும்புகிறார்கள் என்பதே அதன் பொருள். ஜாதி வேறுபாடு பாராமல இருந்தால் நண்பர்களாகவும் இருக்க முடியும். கூட்டுமுறையில் வாழ்க்கை நடத்தவும் முடியும். இதுவரை ஜாதிக்கட்டுப்பாடு மணவினையைப் பாதித்து வந்ததுபோல இனிமேலும் பாதித்துவர முடியாது. என் விருப்பம்போல் உண்ண எனக்குச் சுதந்திரம் உண்டு என்று கூறினால உண்ணத் தகாததை யெல்லாம் உண்ணலாம் என்று பொருள் படாது. சுதந்திரம் உண்டு என்று கூறினால் உடனே என்ன தவறு வேண்டுமானாலும் செய்யலாம்

என்று அர்த்தமாகாது அதன் பொருளெல்லாம் ஆண்களும் பெண்களும் தாங்கள் உண்மையாகவே எதை நன்மை என்று கருதுகிறார்களோ அதன்படி நடக்கச் சம்மதிக்கிறோம் என்பதே யாகும்.

மணம் என்பது ஒரு முக்கியமான விஷயம். வாழ்க்கை முழுவதையும் பாதிக்கும் விஷயம் இருவருடைய வாழ்க்கையும் இன்பகரமாக இருக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடனேயே அதில் இறங்கவேண்டும். மற்றபடி சாவசுதந்திரியம் அளிக்க வேண்டும் இதுவே நான் கூறுவது சாதாரணமாகத் தொழிலாளி கள் தங்கள் தொழிலைத் தங்கள் குழந்தைகட்கும் கற்றுக் கொடுக்க வேண்டும் என்றே விரும்புவார்கள். ஆதலால் தாயும் தந்தையும் ஒரே தொழில் வகுப்பைச் சேர்ந்தவர்களாகவே இருப்பார்கள். இப்படிக் கூறுவதால் இவர்களிடையே சுதந்திரம் இருக்கக்கூடாது என்று அர்த்தமில்லை ஜனங்கள் எப்போதும் போல ஜாதிக் குள்ளேயேதான் மணம் செய்து கொள்வார்கள் உடனேயே புரட்சி உண்டாகி விடமாட்டாது. ஆனால் ஜாதிவிட்டு மணம் செய்ய விரும்புகிறவர்களுக்கும் இடமிருக்க வேண்டுமென்பதே என் கருத்து.

இந்த சுதந்திரத்தை ஏற்படுத்துவது எப்படி? நான் உங்களி டம் செய்துகொள்ளும் வேண்டுகோள் எந்த சேவை செய்தாலும் அன்பு நெறியினின்றும் அணுவளவு கூடப் பிறழாதீர்கள், சண்டை சச்சரவு வழியைப் பின் பற்றாதீர்கள் எது சரி எது தவறு என்று ஆராய்ந்து தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள் "நான் செய்யக் கூடிய பெருந் தவறு என் சகோதரனை பகைப்பது தான்" என்று தெளிவாக அறிந்து கொள்ளுங்கள், எதுவோ நல்ல சீர்திருத்த மாயினும் அதைச் செய்து முடிக்க பலாத்காரத்தை உபயோகிக் காதீர்கள். அறிவுபுகட்டும் வழியையே பயன்படுத்துங்கள். நாம் மாறுதல் செய்யவேண்டியது அவசியந்தான் ஆனால் ஏற் கெனவே உள்ள கஷ்டம் போதும்; இதைவிட அதிகக் கஷ்டத்தை உண்டாக்கி விடாதீர்கள். பலாத்காரம் மூலமாகத்தான் மாறுதல்

செய்ய முடியும் என்று எண்ணுவதற்குக் காரணம் மனிதப்பண்பில நம்பிக்கையில்லாததே யாகும் நாம பலவீனமாக இருக்கும் போழுதுதான பலாத்காரத்தைப பற்றிச சிந்திக்கிறோம. நீங்கள தவறான காரியம் செய்தாலகூட நான உங்களிடம அறிவு புகட்டும முறையையே கையாணடு வந்திருப்பதை அறிவீர்கள. உதாரண மாக யாரேனும புகை குடிந்தால அது தீயது என்று அறிவு புகட் டவே முயன்று வந்திருக்கிறேன இதே போலதான சமூக பழக்க வழக்கங்கள விஷயத்திலும நடந்து கொள்ளவேணடும். குழந்தை கள பாடம படிக்காவிட்டால பலாத்காரம உபயோகிப்பதால யாதொரு பயனும ஏற்படாது அன்பினால தான அவர்களைத திருத்தவேணடும ஆகவே என கருத்துக்கு நீங்கள மதிப்புத் தருவ தானால அன்பு முறையினால சமூக சீர்திருத்தங்களைச செய்ய வேணடும என்று நினைவில வைத்துக்கொள்ளுங்கள.

தற்சமயம ஜனங்கள பிராமண வகுப்பாரிடம அளவு கடந்த துவேஷத்தைக காட்டுகிறார்கள அது வருந்தத்தக்கது. நானும் அந்த விதமாகத துவேஷத்துக்குப பாத்திரமாயுள்ள பிராமண வகுப்பையே சேர்ந்தவன எந்தக குறிப்பிட்ட வகுப்பாரிடமும துவேஷம கொள்வது சரியான வழியாகத தோன்றவில்லை. நான் அந்த வகுப்பைச சேர்ந்தவனா யிருப்பதால கடுமையான மொழி களை உபயோகிக்கவில்லை இப்படித துவேஷம காட்டுவது நல்ல தன்று அதை ஜனங்கள தங்கள அனுபவத்திலிருந்தே தெரிந்து கொள்ள விட்டு விடவேணடும. ஆயினும நீங்கள என்னுடன நெருங்கிப பழகியவர்கள, என்னுடன சேர்த்து உழைப்பவர்கள். ஆதலால நீங்கள சமூக சீர்திருத்த விஷயத்தில அன்பு முறை யையே கையாளவேண்டுமென்று விரும்புகிறேன் இந்த விஷயத் தில ஏற்பட்டுள்ள துவேஷமும, பகைமையும், நம்பிக்கையின்மை யும் அபரிமிதம் நீங்கள அவற்றிற்கு இரையாகிவிடக் கூடாது என்று விரும்புகிறேன். நீங்கள என்னை நம்புவதாயிருந்தால், நீங்கள பரஸ்பரம நம்பிக்கை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் நான் குறிப்பிட்ட அபாயத்தில அகப்பட்டுக் கொள்ளா

திருக்க வேண்டு மென்றும் விரும்புகிறேன் வைதீகர் ஒருவர் உங்களுடன் உண்ண விருமபவிலலை எனறு வைத்துககோளவோம். அதற்காக அவரை கஷடபபடுததுவதிலும பயனிலலை அவரை ஏமாறறியோ பலவந்தப் படுததியோ உஙகளுடன உட்காாநது உண்ணும்படி செயவதிலும் பயனிலலை நீஙகள நடநதுகோளளும் மாதிரியைப் பாாதது அவரும் தமது வழியைந திருததிககோளளும படி செயயவேணடும நம்முடைய வாழககை முறையேதான அவரைத் திருததவேணடும் பலவநத முறையைக கையாளவதாயிருநதால முஸலமான்கள மத மாறறம செயவதறகாகக கையாளும தவருன முறையைக கையாளபவாகளாவீாகள இப்போழுது கிறிஸதவர்களும, முஸலிமகளும பலவநத முறையைக கையாளவது தவறு எனறு வருநதுவதுடன, அதை விடடுவிடவும செயதிருக கிருர்கள. இநத மாதிரி விஷயஙகளில பலவநத முறையால பயனிலலை எனபதை உலகம முழுவதும அறிநது கோணடு விட்டது ஒருவா நமமுடைய கருததுககு மாருன கருததுடையவராக இருககிருர் எனறு வைததுககோளளுஙகள அவருககு ஜாதியொழிபபிலும், மண சுதநதிரததிலும நமபிககையிலலை எனறு வைததுககோள்ளுஙகள நாம அவரை முட்டாள எனறு கருதலாம்; ஆனுல் அதறகாக அவரை வெறுககவேண்டிய அவசியமில்லை அபபடி யில்லையாருல நாம, ‘சமூக சீாதிருததவாதிகள’ என்ற பெயருடன ஒரு புதிய ஜாதியை சிருஷ்டிபபவாகளாவோம. பலவந்த முறையைக கையாளவதாயினும புதிய ஜாதியை சிருஷ்டிபபோமே யனறி, பழைய ஜாதியை ஒழிககமாடடோம நம எண்ணம் நிறைவேருமல போகும

மாவை சுடு தண்ணீரில கரைக்க வேண்டுமாருல என்ன செய்யவேண்டும்? மாவின மீது சுடு தணணீரை அபபடியே மொத்தமாக ஊறறிருல மாவு கரையாது கட்டியாகப போயவிடும் அதனுல முதலில குளிாநத நீரில கலநது கோண்டு பிறகு மெதுவாகச் சிறிது சிறிதாக சுடு தண்ணீரைக கலநதால மாவை சுடு தண்ணீரில கரைதது விடலாம். ஆகவே பலவந்த முறையால்

எதையும் சாதிக்க முடியாது அறிவு புகட்டும் முறையால் தான் முடியும் இந்த உவமை மாவுக்கும், சுடு தண்ணீருக்கும் பொருந்துவது போலவே மக்கள் மனத்துக்கும் பொருந்தும்.

அன்பு முறை விரைவாகப் பயன் தராது. பகைமை முறை தான் விரைவாகப் பயன் தரும் என்று எண்ண வேண்டாம், அன்பு முறையும், அறிவு புகட்டும் முறையும் தான் பலன் தரும் வழி. வேறு வழி கிடையாது பகைமை வழியும், பலவந்த வழியும் தோல்வியுறுமே யன்றி வெற்றி பெறாது. நன்கு ஆராய்ந்து பார்த்தால் அன்பு முறைதான் அதி விரைவில் பயன் தருவதாகும் சமூக சீர்திருத்தம் விரும்புவோர் கூறும் பல விஷயங்களை நான் ஒத்துக் கொள்கிறேன் அதே சமயத்தில் அவர்களுக்கும் எனக்கு முள்ள வேறுபட்ட கருத்துக்களையும் கூறிவிட்டேன்.

தீண்டாமை

பல வருஷங்களுக்கு முன் சேலம் நகர சபையில் இரண்டு பஞ்சமர்கள் ஊழியராய் இருந்தனர். அவர்களுடைய வேலை நகரத்தின் சில பகுதிகளிலிருந்த தண்ணீர்க் குழாய்களுக்குத் தண்ணீர் வரும்படி மூடு குழாய்களைத் தினந்தோறும் திறப்பதும் மூடுவதும் தான். நகரசபை எஞ்சினியர் மற்றவர்களை வார்டு மாற்றம் செய்யும் வழக்கத்தை அனுசரித்து, அவர்களையும் பிராமண அக்கிரகார வார்டுக்கு மாற்றினார். அப்பொழுது நான் நகர சபைத் தலைவனாக இருந்தேன். இந்த மாற்றம் நடந்தது எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் அப்படி மாற்ற வேண்டாம் என்று கூறியிருப்பேன் என்று எண்ண வேண்டாம். இந்த மாற்றம் நடந்ததும், அக்கிரகாரத்தில் பெருத்த கிளர்ச்சி ஏற்பட்டது. பிராமணர்கள் எல்லோரும் என்மீது கோபம் கொண்டார்கள்.

“நீர் சமூக சீர்திருத்தவாதியாக இருக்கலாம். ஆனால் நீர் நகர சபைத் தலைவராகயிருந்துகொண்டு உம்முடைய கொள்கைகளை எங்களிடம் திணிக்க உமக்கு உரிமை கிடையாது. எங்களுக்குத் தொல்லை கொடுக்கும் நோக்கத்துடனேயே நீர் இந்தப் பஞ்சமர்களை எங்கள் அக்கிரகாரத்துக்கு மாற்றியிருக்கிறீர். அவர்களை மாற்றுவதற்கு வேறு எத்தனையோ இடங்கள் இருக்கின்றனவே?” என்று பிராமணர்கள் கூறினார்கள்.

அக்கிரகாரத்தில் எனக்கும் பல நண்பர்கள் இருந்தார்கள். அவர்கள் என்னுடன் பல விஷயங்களில் ஒத்துழைக்கும் சக ஊழியர்கள். அவர்களில் ஒருவர் “என்னுடைய வயதான தாயார், குழாயத் தண்ணீரை உபயோகிக்க ஆட்சேபிக்கின்றாள். எனக்கு

உதவி செய்யுங்கள்" என்று சொன்னார் மற்றொருவர், "என்னுடைய சிறிய தாயார் ஸ்நானம் செய்ய முடியாமல் தவிக்கிறாளே, என்ன செய்வது?" என்று கேட்டார். மற்றும் ஒருவர் "நீர் என்ன என்னுடைய பாட்டியாரைக் கொல்ல வேண்டுமென்று எண்ணி விட்டீரோ? அவள் இரண்டு நாட்களாக அன்ன ஆகாரமின்றிப் பட்டினியாயிருக்கிறாளே" என்று எழுதினார் நான் அந்தப் பக்கமாகப் போகும்பொழுது அங்குள்ள விதவைகள் எல்லோரும் என்னை வெகு கோபமாகச் சீறிப் பார்த்தார்கள் தீண்டாதாருடைய தீட்டு எதற்குத் தீயது என்று அவர்கள் எண்ணுவதையும், வெறுப்பதையும் நான் அறிவேன்.

அந்தக் காலத்தில் மகாத்மா காந்தியடிகள் சத்தியாக்கிரக தர்மத்தைப் போதிக்காதிருந்தது அதிர்ஷ்டமாகும் அந்தத் தர்மத்தை அறிந்திருந்தால், அவர்கள் உடனே அதை எனக்கு விரோதமாக அனுஷ்டிக்க ஆரம்பித்திருப்பார்கள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருப்பார்கள். தங்கள் குறை நியாயமானது என்றே நம்பினார்கள். அதனால் எளிதாக உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருப்பார்கள் அப்பொழுது என் கதி என்ன ஆயிருக்கும்? அரசாங்கம் கூட தீண்டாதவர்களை அக்கிரகாரத்தினின்றும் வேறு வார்டுக்கு மாற்றும்படி தந்தி மூலம் உத்தரவு அனுப்பி யிருப்பார்கள். "உம்முடைய சமூக சீர்திருத்தம் நியாயமானதுதான், ஆயினும் உமக்கு உம்முடைய ஜனங்களுடைய மனப்பான்மை தெரியவில்லையே" என்று கூறி யிருப்பார்கள். நான் மாற்றாவிட்டால் என்னைக் கவனியாமல் அவர்களே மாற்றியிருப்பார்கள்

அந்தக் காலத்தில் அக்கிரகாரத்து மக்களுக்கு சத்தியாக்கிரக முறை தெரியாதிருந்தபடியால், அவர்கள் ஆட்சேப மனுக்கள் அனுப்புவதோடும், சட்ட சபையில் தீர்மானங்கள் கொண்டு வருவதோடும், நின்று விட்டார்கள். அவர்களும் என்னுடன் வாதம் செய்தார்கள். ஆனால் நானோ அசைந்து கொடுக்கவில்லை. "நீங்கள் உங்கள் மதத்தையும், மதானுஷ்டானங்களையும் உங்கள் வீட்டுக்குள்ளே வைத்துக்கொள்ள வேண்டுமேயன்றி, நகரசபை விஷயத்

தில் தலையிடலாகாது. நகர சபையானது ஜாதி வேற்றுமை பாராட்ட முடியாது. நீங்கள் மாற்றச் சொல்வதைக் கேட்டு அவர்களை வேறொரு வார்டுக்கு மாற்றினால், அந்த வார்டு மக்களும் உங்களைப் போலவே அவர்களை மாற்ற வேண்டுமென்று கேட்டால் என்ன செய்வது? நீங்கள் பொறுத்துக் கொள்வதுதான் நல்லது'' என்று நான் கூறினேன். இதற்கு பதில் சொல்ல முடியவில்லை. அப்படியானால் அந்தப் பஞ்சமர்களை வேலையை விட்டு நீக்கி விடுங்கள் என்று கூற அவர்களுக்குத் தைரியமில்லை. ஆகவே சிறிது காலம் சென்றபின் எல்லாம் அடங்கி விட்டது. நானுங்கூட அதை மறந்து விட்டேன்.

அரசியல் சீர்திருத்த விசாரணையின் போது பார்லிமெண்டுக் கூட்டுக் கமிட்டியின் முன் ஒருவர் ''இந்தியா தேசத்தில் ஏராளமான ஜாதிகளும், வித்தியாசங்களும் இருப்பதால் இங்கே ஜனநாயகம் முன்னேறுவது என்பது முடியாத காரியம்'' என்று கூறினார். அப்போது அங்கிருந்த திரு. கே. டி. பால் சேலத்தைச் சேர்ந்தவர். அவர் உடனே கமிட்டியாரிடம் ''அப்படியில்லை; ஒரு நகர சபைத் தலைவர் பிராமணர், அவர் தமது ஆட்சியில் ஜாதி வித்தியாசத்தை ஒழிக்கும் விஷயத்தில் வெற்றி பெற்றிருக்கிறார். இந்தியா முன்போலில்லை இப்பொழுது மாறியே வருகிறது'' என்று சொன்னார். இந்த விஷயத்தைக் கேட்டதும் எனக்கு அந்தப் பஞ்சமர் விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. சேலத்து பிராமண நண்பர்களும் இதைச் செவியுற்றார்கள். ஆனால் அவர்கள் கோபமடையவில்லை, சந்தோஷமே அடைந்தார்கள். நான் பிடிவாதமாயிருந்தது நல்லதென்றே எண்ணினார்கள்.

இந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முன், நான் சேலத்தில் வக்கீலாகத் தொழில் பார்க்க ஆரம்பித்துச் சிறிது காலத்துக்கெல்லாம் நான் இரண்டு ஹரிஜனச் சிறுவர்களைப் பாடசாலைக்கு அனுப்பி வைத்தேன். அதற்கும் ஜனங்கள் பலத்த ஆட்சேபம் கூறினார்கள். ''இந்தச் சிறுவர்கள் வந்தால் எல்லாச் சிறுவர்களும் வராமல் நின்று விடுவார்கள். இரண்டு பஞ்சமச் சிறுவர்கள் படிக்கவேண்டு

மென்பதற்காக இருநூறு ஜாதிச் சிறுவர்களைப் படிக்க வேண்டாம் என்று கூறுகிறீர்களா? நீங்கள் விரும்புவது கல்வியா, அல்லது வெறும் புகழ்ச்சியா? உங்களுக்குப் புண்ணியமாகப் போகும், இதை வற்புறுத்தாதீர்கள். வற்புறுத்தினால், பாடசாலை நாசமாகப் போய் விடும். தயவு செய்து அந்த இரண்டு சிறுவர்களையும் நிறுத்தி விடுங்கள்" என்று பாடசாலை ஆசிரியர்கள் கூறினார்கள். ஆனால் நான் பிடிவாதமாக இருந்தேன். ஜாதிச் சிறுவர்களில் சிலர் பாடசாலைக்குப் போகாமல் நின்று விட்டார்கள். ஆனால் வெகு சிலர்தான் பஞ்சமச்சிறுவர்களில் ஒருவன் பரீட்சையில் தேறி அரசாங்க உத்தியோகம் பெற்றான். இந்தச் சண்டையும் சிறிது காலத்துக்குப் பின் மறந்து போய்விட்டது. ஆதிதிராவிடச் சிறுவர்கள் மற்ற ஜாதிச் சிறுவர்களுடன் படிப்பது சகஜமாய் விட்டது. யாரும் ஆட்சேபிக்கவில்லை.

பிறகு நான் நகரசபைத் தலைவனாக இருந்தபோது, அரசாங் கத்தார் நடத்திய போதனைப் பயிற்சிப் பாடசாலைக்கு இரண்டு ஆதிதிராவிட மாணவர்களைப் பயிற்சி பெறுவதற்காக அனுப்பி னேன். அந்தப் பாடசாலையின் தலைமை ஆசிரியரும், ஐரோப்பிய ராயிருந்த பாடசாலை இன்ஸ்பெக்டரும் சேர்ந்துகொண்டு ஆட்சே பித்தார்கள். "ஆதிதிராவிட மாணவர்களுக்கென்று தனியாக ஒரு பாடசாலை சென்னையில் இருக்கிறது. மற்ற ஜாதி மாணவர்கள் இங்கே ஆட்சேபிக்கிறார்கள். ஆதலால் சென்னையிலுள்ள பாட சாலைக்கு அவர்களை அனுப்புங்கள்" என்று அவர்கள் இருவரும் கூறினார்கள். நானோ சண்டை போடும் பேர்வழி. அதனால் உடனே விதிகளைப் புரட்டிப் பார்த்தேன். சேலத்திலுள்ள பாடசாலையில் சேர்க்க மறுப்பதற்கு விதிகளில் இடமில்லை. அதனால் பஞ்சமச் சிறுவர்களைச் சேர்த்துக் கொண்டார்கள். அந்தச் சிறுவர்கள் பயிற்சி பெற்று பரீட்சையில் தேறினார்கள். அப்பொழுது ஜாதி மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்யவோ சத்தியாகிரகம் செய் யவோ ஆரம்பிக்காதது அதிஷ்டம் தான். அவர்கள் அந்த மாதிரி செய்ய ஆரம்பித்திருந்தால் நான் தோல்வியே அடைந்திருப்பேன்.

ஆதலால் எந்த விஷயமாயிருந்தாலும் சததியாக்கிரக முறையைககையாள உரிமையுண்டு என்று எண்ணி விடலாகாது. நாம் கூறுவது நியாயமாயிருந்தால்தான், அந்த ஆயுதததைக கையில எடுககலாம் "நமமுடைய வழககு நியாய மில்லாவிட்டால் சததியாக்கிரக வேடி மருந்து வேடிககாது போகும" என்று மகாத மாஜி கூறினர் சததியாககிரக வேடி மருநது சரியானபடி வேடிக் காது என்பது உணமைதான. ஆயினும அதைக கையாளபவாக் கும் அருகிலிருபபவாகட்கும பலவிதமான கஷடஙகள உணடா கவே செயயும ஆதலால் அநதகைய சோதனைகளைச செயபவர் கள் விசேஷமான பொறுபபுடையவர்களாவாாகள.

சமயம்

நான் பல நூல்கள் படித்திருந்த போதிலும், நம்முடைய சமயத்தைப் பற்றிய நூல்களைப் படிக்கவில்லை. என்னுடைய சமயத்தைப் பற்றி என்னுடைய தாயாரிடமிருந்துதான் கற்றுக்கொண்டேன். அதை நூல்களிலிருந்தும் கற்றுக்கொள்ளவில்லை, குருவினிடமும் கற்றுக்கொள்ளவில்லை. ஆயினும் நான் பின்னால் கற்றுக்கொண்டதற்கும், என் தாயாரிடம் கற்றுக்கொண்டதற்கும், எவ்வித பூரணபா[illegible] காணப்பட[illegible]

விஞ்ஞானத்தைச் சிறிது படித்தால், உடனே சமயத்தைப் பற்றிய எண்ணங்கள் குழம்பி விடுகின்றன. ஆயினும் மேனாட்டு விஞ்ஞானங்களை நன்றாகப் படிப்போமானால் சமயத்தை அதிலும் ஹிந்து சமயத்தை வெகு நன்றாக அறிந்துகொள்ள உதவும். தற்கால விஞ்ஞானம் கண்டு பிடித்துள்ள பல அற்புதங்களைக் கண்டு ஆச்சரியப்படுகிறோம். உதாரணமாக ரயில்வே, தந்தி, ஆகாயக்கப்பல், கம்பியில்லாத தந்தியைக் கண்டு வியக்கின்றோம். ஆனால் அற்புதத்திலும் அற்புதம் பிரபஞ்சம் முழுவதிலும் தோய்ந்து நிற்கும் ஆன்ம ஏகமதான கடவுளை முற்றிலும் அறிவது எப்படி கஷ்டமோ அப்படியே கஷ்டம் அற்பத்திலும் அற்பமான பொருளை 'முற்றிலும்' அறிவதும். 'முற்றிலும்' என்னும் மொழியைக் கூட அறிய முடியாது. நான் குழந்தையாயிருந்தபொழுது 1, 2, 3 என்று கற்றுக்கொடுத்தார்கள். அப்பொழுது அந்த இலக்கங்களுக்கு முடிவு இருக்கும் என்று எண்ணினேன். ஆனால் அவற்றிற்கு முடிவு கிடையாது என்று இப்பொழுது அறிகிறேன். எந்த இலக்கமானாலும் அத்துடன் ஒன்றைச் சேர்க்கலாம். இதுதான் இறுதி இலக்கம் என்று கூற முடியாது. இப்படிக்

கூட்டிக்கொண்டு போவதற்கு முடிவுகிடையாதது போலவே கழித்துக்கொண்டும் வகுத்துக்கொண்டும் போவதற்கும் முடிவு கிடையாது. எவ்வளவு பெரிய இலக்கத்தையும் பெருக்கச சாத்தியமாவது போலவே எவவளவு சிறிய இலக்கததையும் பிரிப்பது சாததியமாகும். இதற்கு முடிவு ஏது? ஆகவே கருமபல கையும பலபபமும் கொண்டு கடவுளின முடிவறற தன்மையை அறிந்துகொள்ளலாம

மேகமில்லாமலுளள வானததை இரவில் பாாத்தால் எத்தனையோ நடசததிரஙகள் காணபபெறுகின்றன தூர திருஷ்டிக் கண்ணாடி மூலம பாாத்தால வானததின ஒரு சிறு பகுதியில மட்டுமே சாதாரணமாகக் கணட அததனை நட்சததிரஙகளையும காணலாம். அதுபோல பிரபஞசம எலலையறறது எதையும முறறிலும அறிய முடியாது என்று காணபதே அறிவிலும அறிவாகும எதையும முறறிலும அறிய முடியாது ஏதோ அரை குறையாகவே அறிய முடியும் ஆழநது ஆராயநதால மிகுந தெளிவான விஷயம என்பது கூட பரமரகசியமாகவே தோனறும.

கிரீஸ் தேசத்தில ஸோக்ரதா என்று ஒரு ஞானி இருநதார் என்பதை அறிவீகள "நான் எதையும அறியமுடியாது, அதனால எவ்வளவு கலவியுடையவர்களாயினும பணிவுடையவாகளாயிருதத்லே நமது முதற கடமை" எனறு அவர் திருமபததிருமப வற்புறுத்தி வநதாா. எபபடி நமககு அரசியலில மகாதமா காநதியோ அப்படியே விஞ்ஞானிகளுககு ந்யூட்டன் எனனும அறிஞா இதுவரை பிறநத விஞ்ஞானிகளில அவரே தலை சிறநதவா எனறு எல்லோரும் கருதுகிறார்கள். ஆனால அவரோ தம்முடைய அறிவும் ஆராய்ச்சியும் கடற்கரையில ஒதுஙகும் சிபபிகளைச் சேகரிப்பது போன்றவைகளே என்று கூறுகிறார். அறிய முடியாத அளவு பெரியதாகும் அறிவு என்னும் மகா சமுத்திரம் ஏதோ அஙகுமிங்கும் அலைகள் கொண்டு வந்து ஒதுக்கும் சிப்பிகளில் சிலவற்றைச் சேகரித்ததும் சமுத்திரத்தைப் பற்றி முழுவதும் அறிந்து

விட்டதாக எண்ணி விடுகிறோம். நியூட்டன் எப்படி பணிவுடனும் மரியாதையுடனும் அறிவைப் போற்றினாரோ அப்படித்தான் நாம் போற்ற வேண்டும். பணிவுடையோர் தான் எதையும் அறிய முடியும்.

தற்கால விஞ்ஞானம் கண்டு பிடிப்பவை எவையும் சமயத்தை மறுக்கவில்லை. இரண்டும் ஒரே விதமானவை என்றே நான் கருது வதால் அவ்விரண்டுக்கு மிடையில் எனக்கு எவ்வித முரண்பாடும் இருப்பதாகத் தோன்றவில்லை. பத்து வயதுச் சிறுமியை மணப் பதோ பதினாறு வயது விதவையின் தலையை மொட்டையடிப் பதோ ஹிந்து சமயம் என்று கருதாதீர்கள். பூணூலைத் தோளில் போட்டுக்கொள்வதும் பலவிதமாக நெற்றிக்கு இட்டுக்கொள்வதும் ஹிந்து சமயமாகாது. இவை எல்லாம் ஹிந்து சமயமாகிய சமுத் திரத்தின் மீது அவ்வப்போது தோன்றும் அலைகளாகும். அலை கள் தான் சமுத்திரம் என்று எண்ணி விடாதீர்கள். அலைகள் மறைந்து விடலாம். ஆனால் சமுத்திரமோ எப்பொழுதும் உள்ள தாகும். இப்பொழுதுள்ள வழக்கங்களை யெல்லாம் விட்டுவிட் டாலும் நாம் ஹிந்துக்கள்தான், முஸ்லீம்களாகவோ கிறிஸ்தவர் களாகவோ நாஸ்திகராகவோ ஆகிவிடமாட்டோம்.

ராமன் என்று ஒரு மனிதனைப் பார்ப்பதாக வைத்துக் கொள் ளுங்கள். ராமன் என்று யாரைக் கூறுகிறோம்? ராமன் என்பது அவனுடைய கையும் காலும் தலையுமல்ல. அம்மை வந்து முகம் மாறினாலும், கண்ணிழந்து குருடானாலும் காலிழந்து நொண்டி யானாலும் அதே ராமன்தான். ஆம், மனிதன் என்பவன் உட லன்று; அவனுடைய எண்ணங்கள் உணர்ச்சிகள் ஆகியவை யாகும் என்று கூறுவீர்கள். அப்படிச் சொல்வதும் சரியன்று. எண்ணங்கள் மாறினாலும் அதே மனிதன்தானே. ஆகவே மனி தன் உடலுமன்று, எண்ணங்களுமன்று எண்ணங்களுக்கு ஆதா ரமாயிருந்து எண்ணுவதும் பேசுவதும் செய்வதும் நடத்துபவனே மனிதன். இதுவே சகல சமயங்களுக்கும் அஸ்திவாரமான கோள் கையாகும்.

கூட்டிக்கொண்டு போவதற்கு முடிவுகிடையாதது போலவே கழித்துக்கொண்டும் வகுத்துக்கொண்டும் போவதற்கும் முடிவு கிடையாது. எவ்வளவு பெரிய இலக்கத்தையும் பெருக்கச சாத்தியமாவது போலவே எவ்வளவு சிறிய இலக்கத்தையும் பிரிப்பது சாத்தியமாகும். இதற்கு முடிவு ஏது? ஆகவே கரும்பலகையும் பலபமும் கொண்டு கடவுளின முடிவற்ற தன்மையை அறிந்துகொள்ளலாம

மேகமில்லாமலுள்ள வானத்தை இரவில பார்த்தால் எத்தனையோ நட்சத்திரங்கள் காணப்பெறுகின்றன. தூர திருஷ்டிக கண்ணாடி மூலம பார்த்தால வானத்தின ஒரு சிறு பகுதியில மட்டுமே சாதாரணமாகக கண்ட அத்தனை நட்சத்திரங்களையும காணலாம் அதுபோல பிரபஞ்சம எல்லையற்றது எதையும முற்றிலும அறிய முடியாது என்று காண்பதே அறிவிலும அறிவாகும எதையும முற்றிலும அறிய முடியாது ஏதோ அரை குறையாகவே அறிய முடியும். ஆழ்ந்து ஆராய்ந்தால மிகத தெரிவான விஷயம என்பது கூட பரமரகசியமாகவே தோன்றும.

கிரீஸ் தேசத்தில ஸோக்ரதா என்று ஒரு ஞானி இருந்தார் என்பதை அறிவீர்கள "நான எதையும அறியமுடியாது, அதனால எவ்வளவு கல்வியுடையவர்களாயினும பணிவுடையவர்களாயிருத்தலே நமது முதற் கடமை" என்று அவர் திரும்பத்திரும்ப வற்புறுத்தி வந்தார். எப்படி நமக்கு அரசியலில மகாத்மா காந்தியோ அப்படியே விஞ்ஞானிகளுக்கு ந்யூட்டன என்னும அறிஞர் இது வரை பிறந்த விஞ்ஞானிகளில அவரே தலை சிறந்தவர் என்று எல்லோரும் கருதுகிறார்கள். ஆனால அவரோ தம்முடைய அறிவும் ஆராய்ச்சியும் கடற்கரையில ஒதுங்கும் சிப்பிகளைச் சேகரிப்பது போன்றவைகளே என்று கூறுகிறார். அறிய முடியாத அளவு பெரியதாகும் அறிவு என்னும் மகா சமுத்திரம் ஏதோ அங்குமிங்கும் அலைகள் கொண்டு வந்து ஒதுக்கும் சிப்பிகளில் சிலவற்றைச் சேகரித்ததும் சமுத்திரத்தைப பற்றி முழுவதும் அறிந்து

விட்டதாக எண்ணி விடுகிறோம் நியூட்டன் எப்படி பணிவுடனும் மரியாதையுடனும் அறிவைப் போற்றினாரோ அப்படித்தான் நாம் போற்ற வேண்டும். பணிவுடையோர் தான் எதையும் அறிய முடியும்.

தற்கால விஞ்ஞானம் கண்டுபிடிப்பவை எவையும் சமயத்தை மறுக்கவில்லை. இரண்டும் ஒரே விதமானவை என்றே நான் கருதுவதால் அவ்விரண்டுக்குமிடையில் எனக்கு எவ்வித முரண்பாடும் இருப்பதாகத் தோன்றவில்லை. பத்து வயதுச் சிறுமியை மணப்பதோ பதினாறு வயது விதவையின் தலையை மொட்டையடிப்பதோ ஹிந்து சமயம் என்று கருதாதீர்கள் பூணூலைத் தோளில் போட்டுக்கொள்வதும் பலவிதமாக நெற்றிக்கு இட்டுக்கொள்வதும் ஹிந்து சமயமாகாது இவை எல்லாம் ஹிந்து சமயமாகிய சமுத்திரத்தின் மீது அவ்வப்போது தோன்றும் அலைகளாகும் அலைகளை தான் சமுத்திரம் என்று எண்ணி விடாதீர்கள். அலைகள் மறைந்து விடலாம் ஆனால் சமுத்திரமோ எப்பொழுதும் உள்ளதாகும் இப்பொழுதுள்ள வழக்கங்களையெல்லாம் விட்டுவிட்டாலும் நாம் ஹிந்துக்கள்தான், முஸ்லீம்களாகவோ கிறிஸ்தவர்களாகவோ நாஸ்திகராகவோ ஆகிவிடமாட்டோம்.

ராமன் என்று ஒரு மனிதனைப் பாரப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். ராமன் என்று யாரைக் கூறுகிறோம்? ராமன் என்பது அவனுடைய கையும் காலும் தலையுமல்ல. அம்மை வந்து முகம் மாறினாலும், கண்ணிழந்து குருடானாலும் காலிழந்து நொண்டியானாலும் அதே ராமன்தான். ஆம், மனிதன் என்பவன் உடலன்று, அவனுடைய எண்ணங்கள் உணர்ச்சிகள் ஆகியவையாகும் என்று கூறுவீர்கள் அப்படிச் சொல்வதும் சரியன்று. எண்ணங்கள் மாறினாலும் அதே மனிதன்தானே. ஆகவே மனிதன் உடலுமன்று, எண்ணங்களுமன்று எண்ணங்களுக்கு ஆதாரமாயிருந்து எண்ணுவதும் பேசுவதும் செய்வதும் நடத்துபவனே மனிதன். இதுவே சகல சமயங்களுக்கும் அஸ்திவாரமான கோள்கையாகும்.

ஹிந்து சமயத்தின் சாரம் என்று எதை நான் அறிந்திருக்கிறேனோ அதை உங்கட்குச் சொல்ல விரும்புகிறேன். காரணமுள்ள இடத்திலெல்லாம் காரியம் இருக்கவே செய்யும் தண்ணீருக்குள் கல்லைப் போட்டால் தண்ணீரில் ஒரு சிறு அலை உண்டாகும். அந்த அலை மற்றொரு அலையை உண்டாக்கும், இப்படியே அலைகள் உண்டாகும் கடவுள் கூட அதைத் தடுக்க முடியாது என்று கூறலாம் இரண்டோடு இரண்டைச் சேர்த்தால் நாலாகும். அதைக் கடவுள் மாற்ற முடியுமா? இந்த விஷயத்தை உணர்ந்து கொண்டால் தான் ஹிந்து சமயத்தின் சாரம் என்று நான் கருதுவதை நீங்கள் அறிந்து கொள்ள முடியும்

நம்முடைய மனத்தில் தோன்றும் ஒவ்வொரு கெட்ட எண்ணமும் கடவுளாகிய நீரில் தோன்றும் துன்பகரமான அலையாகும். அதைக் கடவுள் இதயத்தைப் பிளந்து வந்தது என்று கூடக் கூறலாம் அதனால் தான் சில ஞானிகள் நாம் கெட்ட எண்ணங்களை எண்ணும்போது கடவுள் கண்ணீர் விடுவதாகக் கூறுகிறார்கள்

அமெரிக்காவில் பேசுவது இங்கே கேட்கிறது, அது எப்படி என்பது நமது கண்ணுக்குப் புலப்படவில்லை அதேபோல கெட்ட எண்ணங்களும் கண்ணுக்குப் புலப்படா விட்டாலும் கடவுளைப் போய் பாதிக்கின்றன என்று கூறலாம் ஏதோ மார்க்கோனி என்னும் ஒரு ஐரோப்பியர் கண்டுபிடித்தது கம்பியில்லாத தந்தி என்று கருதவேண்டாம் இது பண்டைக்கால முதல் நடந்து வரும் ஒரு காரியமே யாகும் இத்தகைய காரியங்கள் இலட்சக்கணக்கான ஆண்டுகளாக நடந்து வருகின்றன விஞ்ஞானிகள் இப்பொழுதுதான் கண்டு கொண்டிருக்கிறார்கள்

செவிடன் உலகத்தைப் பார்க்கிறான், அதில் எதையும் கேட்க முடியவில்லை திடீரென்று காது கேட்கிறது இதுவரை இத்தனை சப்தம் எல்லாம் எங்கிருந்தது, நான் கேட்கவில்லையே என்று ஆச்சரியப்படுகிறான். அதேபோல உலகத்தில் உலவும் நல்ல எண்ணங்களையும் அறியக்கூடிய சக்தியில்லாதபடி ஆன்மச் செவிட்டுத் தன்

மையும் ஒன்றிருக்கிறது. இந்த ஆன்மச்சேவிட்டுத் தன்மையை அகற்றிவிட முடியுமானால், உடனே உலகமெங்கும் பரவி நிற்கும் எண்ணங்களை எல்லாம் அறியும் சக்தியைப் பெற்று விடுவோம். அப்பொழுது 'ஆகா இவ்வளவு தீமை உலகில் நடமாடுகிறதா' நாம் அறியாமல் இருந்துவிட்டோமே, அதைத் தடுக்கவேண்டாமா?" என்று ஆச்சரியமுறுவோம். பகல் முழுவதும் மனத்தில் துக்கம் நிறைந்திருந்த போதிலும் இரவில் தூக்கம் வந்ததும் அதை மறந்து இன்பமாகத் தூங்குகிறோம். அதனால் உறக்கத்தை ஒரு வரப்பிரசாதமாகவே எண்ணுகிறோம். அதேபோல, உலகில் தீய எண்ணங்கள் நிறைந்திருப்பதால், அவற்றை அறியாமலிருந்து மனச்சமாதானத்துடன் வாழ்வதற்காகவே கடவுள் நமக்கு இந்த ஆன்மச் சேவிட்டுத் தன்மையை அருளியிருக்கிறார்.

உறங்கவேண்டிய சமயத்தில் சிலர் உறங்காதபடி விளக்கு ஏற்றி வைத்துக்கொண்டு படிக்க உட்காருகிறார்கள். அதேபோல கடவுள் நமக்கு ஆன்மச் சேவிட்டுத் தன்மையை அருளியிருந்த போதிலும், அதைப்பொருட்படுத்தாமல் சில வைதீகர்கள் உலகில் நடமாடும் தீய எண்ணங்களைத் தங்கள் ஆன்மாவில் கேட்டறிய முயல்கிறார்கள் இதுதான் சமய விசாரணை என்பதும், தத்துவபோதனை என்பதுமாகும். விளக்கேற்றி வைத்துக்கொண்டு புஸ்தகம் படிப்பவரைப் பாருங்கள். சிறிது நேரம் படிப்பார், பிறகு சோம்பல் உண்டாகிவிடும் உடனே விளக்கை அணைத்துவிட்டு உறங்க ஆரம்பித்துவிடுவார். அதேபோல சமய விசாரணையில் ஈடுபடுகிறவர்களும் சோர்வு உண்டாகி தூங்க ஆரம்பித்துவிடுவார்கள். ஆனால் உபநிஷத்துக்களைப் பாடியவர்களைப் போன்றவர்களும், மேனாட்டில் விஞ்ஞான ஆராய்ச்சி செய்கிறவர்களைப் போன்றவர்களும் விளக்கை அணையாமல் உண்மையை அறியப்படாத பாடு

படுவார்கள். அவர்கள் முடிவுதான் சமயம், அவர்களுடைய உழைப்பைத்தான் விஞ்ஞானம் என்கிறோம்.

இனி "கர்மம்" என்பதன் பொருளைக் கூறுகிறேன். ஒரு சமயம் நான் கூறும் பொருள் சாஸ்திரங்களில் நீங்கள் கற்றதற்கு முரண்பட்டதுபோல தோன்றலாம். ஆனால் நன்றாய் கவனித்தால் யாதொரு முரண்பாடும் கிடையாது என்று அறிந்து கொள்வீர்கள். நியூட்டன் என்பவர் கவர்ச்சி சக்தி என்ற ஒரு எளிய விஷயத்தைக் கூறினார். ஆனால் அதுவே இதுவரை விஞ்ஞானிகள் நடத்தும் ஆராய்ச்சிகளுக்கெல்லாம் ஆதாரமாக இருந்து வருகிறது. அதேபோல "கர்மம்" என்பதும் எளிதான ஒருவிஷயமே. ஆனால் அதுவேதான் ஹிந்து சமயத்தின் சிக்கலான கொள்கைகளுக்கெல்லாம் ஆதாரமாகும். சகல விஷயங்களுக்கும் ஆதாரமாயிருப்பது எப்பொழுதும் மிக எளிய விஷயங்கள் தான். எது செய்தாலும் அதற்குப் பயன் உண்டு என்பதே கர்மம் என்னும் கொள்கையாகும். இந்த நியதியை நாம் மீற முடியாது. நாம் தண்டிக்கப் படுவோமோ இல்லையோ, நரகத்திற்குச் செல்வோமோ இல்லையோ ஆனால் இது மட்டும் நிச்சயம். எந்தக் காரியம் செய்தாலும் அதற்கு உடனேயே பலன் உண்டாகாமல் போகாது.

செயல் என்பதில் செயல் மட்டுமன்றி எண்ணமும் மொழியுங்கூட அடங்கும். உதாரணமாக பிறர் பொருளைக் கண்டு பொறாமையுறுதல், அதுவும் ஒருவிதமான திருட்டேயாகும். திருட்டு பலவகைப் படுவதால் இந்தத் தீய எண்ணமும் அந்த வகையில் ஒன்றே.

பிரெஞ்சு தத்துவ சாஸ்திரி ஒருவர் கீழ்க் கண்ட வாறு எழுதினார்—சைனாவில் ஒரு பெரிய பணக்காரர் இருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். பிரான்ஸ தேசத்திலுள்ள ஒருவர் அந்தப்பணத்தைப் பெற விரும்புகிறார். அந்தப் பணக்காரரைக் கொல்ல பிரான்ஸ் தேசத்திலுள்ள ஒரு போத்

தானே அழுத்தினால் போதும்; இது யாருக்கும் தெரியாது அப்படி யானால் பொத்தானை அழுத்திப் பணத்தை அடைய யார்தான் விரும்ப மாட்டார்கள்?

அழகான யோசனைபோல் தோன்றினும் அது முற்றிலும் பிழையே அதற்கு வேறொரு பிரஞ்சு தத்துவ சாஸ்திரி அப்படி யாரும் அறியாதபடி கொலை செய்து பணத்தைப் பெறலாமா யினும், நல்லவர்கள் யாரும் பொத்தானை அழுத்திக் கொலை செய்யமாட்டார்கள் சைனாவிலுள்ள மனிதனைக் கொலை செய்வது என்ற தீய எண்ணம் நம்முடைய மனத்தைக் கறைப் படுத்திவிடும் மனத்தைவிட உயர்ந்த சொத்து எது? உலகிலுள்ள சகல சம்பத்துக்களையும் பெற்றாலும், அதற்கு ஈடு கூற முடியாது. யாரும் அறியாவிட்டாலும், எவ்விதத்திலும் செல்வமா யுள்ள சிந்தனை பழுதாய் விடுமாதலால், அத்தகைய தீய எண்ணத்தை விட்டுவிடவேண்டும் என்று பதில் உரைத்தார்.

நாம் பெண்களிடம் தவறாக நடந்துகொண்டால் நாம் வியாதியால் பிடிக்கப்படலாம் பெண் வியாதி எதுவும் நேரா விடினும், நம்முடைய தீய செயலால் தவறாமல் பிடிக்கப் படக் கூடிய ஒரு வியாதி இருக்கவே செய்கிறது அத்தகைய வியாதி யாது? நாம் ஒரு காரியத்தை ஒரு தடவை செய்ய ஆரம்பித்து விட்டால், பிறகு அதைத் திரும்பச் செய்ய ஆசை உண்டாகி விடுகிறது. அதை மறுபடியும் செய்வதற்குத் தகுந்தவர்களாக நம்மை ஆக்கிக்கொள்கிறோம். அதேபோல தீய எண்ணத்தை ஒருதடவை நம்முடைய மனத்தினுள் நுழைய விட்டு விட்டால் பிறகு அது மறுபடியும் எளிதில் நுழைவதற்கு உரிமை பெற்ற தாக ஆகிவிடுகின்றது நான் ஏச்சு மொழிகள் உபயோகிப்ப தில்லை. அதை உபயோகிப்பது எனக்குக் கஷ்டமாகத் தோன்று கிறது; ஆயினும் ஒருமுறை உபயோகிக்க ஆரம்பித்துவிட்டால், மறுமுறை உபயோகிப்பது எளிதாக ஆகிவிடும். மெழுகினால் செய்த பொம்மையை மெதுவாகத் தொட்டாலும் உருவம் மாறு

விடும். அதைவிட மெல்லியது நம்முடைய மனம். அதனால் மிகச்சிறிய தீய எண்ணங்கள் கூடப் போதும் அதைப் பழுதாக்கி விடுவதற்கு.

ஆம், நம்முடைய மனம் மிக மெல்லியதே, அது ஊழூழி காலமாக வளர்ந்து வந்திருக்கிறது ஏதேனும் அதைத தொட்டால், அந்த வடு அதில் மாருமல் நினறுவிடும். எதை எண்ணினாலும், செய்தாலும் அதன சாயல அதைவிட்டு ஒரு நாளும் நீங்க மாட்டாது.

இறந்தாலும் கூட நீங்காது. இறப்பு முடிவு; பிறப்பு ஆரம்பம் என்று எண்ணவேண்டாம. இறநத பின்னர் நம்முடைய ஐநதோகை கணககு அப்படியே நமமைத் தொடர்ந்துவரும். இநத ஜன்மததில நாம நம்முடைய ஆன்மாவுக்கு எநத உருவம அளிக் கின்ருேமோ அந்த உருவத்துடனேயே அது மறு ஜன்மததில் பிறக்கிறது எனபது ஹிநதுமதக் கொள்கையாகும. நம்மை நாமே நம்முடைய எண்ணங்களாலும, செயலகளாலும் சிருஷ்டிக்கிருேம். அதுதான் நம்முடைய விழுச்செல்வம். அதையேதான் நாம் பிதிரார்ஜிதமாகப் பெறுகிருேம். நாம் இறப்பதில்லை, என்றும் வாழ்பவர்களே. நம்முடைய கணக்கை ஒரு பக்கத்தில முடித்து மறுபக்கத்தில் ஆரம்பிக்கிருேம்; அவ்வளவே.

மறு ஜன்மம் உண்டு என்பதில் நம்பிக்கையில்லாதிருந்த போதிலும் கர்மம என்னும் கோள்கை முக்கியமானதே. மறு ஜனமம் என்று ஒன்று இலலாதிருநதபோதிலும், அந்த நியதி வேலை செயயவே செயயும். அதனல் நம்முடைய மனத்தையும் குணத்தையும் பழுது ஆகாமல் பாதுகாத்துக்கோள்ள வேண்டி யது அவசியமாகும். இன்று நாம் எணணுவது நாளை நம்மை ஆக்கவும் செய்யலாம் அழிக்கவும் செய்யலாம். ஹிந்துக்கள் கர்மம் என்னும் கொள்கை பல ஜன்மங்கள் வேலை செய்வதாக கூறுகிருர்கள். அதை நம்பாவிட்டாலும், இந்த ஜன்மத்தில் அது வேலை செய்வதை நாம் புறக்கணிக்க முடியாது தற்காலிக சுக

போகங்களுக்காக நாம் நம்முடைய ஒழுக்கத்தைப் பழுதாகக் கொள்ளலாகாது. வாழ்வில் இன்பம் பெறுவதற்குரிய வழி நம முடைய ஒழுக்கத்தைப் பாதுகாப்பதையே பொறுத்ததாகும். ஒழுக்கம் தவறினல் அதை எளிதில் பழுதுபார்க்க முடியாது.

ஆகவே நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் நம்முடைய ஒழுக்கததைச் சாசுவதமாகப பாதிககின்றது. ஆகவே நாம் இரண்டுவிதமான காரணங்களுக்காக தீமைக்கு அஞ்சவேண்டும். இறந்த பின்னரும் நம்முடைய ஒழுககம நமமுடைய ஆன்மா வுடன் செல்லும் என்று நம்புவோமானல், நம்முடைய ஒழுக்கத்தை தூயதாக வைத்துககொளவது நூறுமடங்கு அதிக முககியமான தாகும். மற்ருெருகாரணம், நாம் நம்முடைய தீமையால் நம் முடைய மனத்தை உடனேயே கெடுததுககொள்கிருேம் எனப தாகும். பிறர் பொருளை கண்டு பொருமைப்பட்டால, உடனே நமக்கு ஒரு அசங்கியமான வால முளைத்துவிடும என்று வைத்துக் கொளளுவோம். அப்படியானல் யாரும பொருமைப் படமாட்டார் கள அல்லவா ? ஆனல் பிறர் பொருளுக்காகப் பொருமைப் படுவதால நம்முடைய ஒழுககத்தில உண்டாகும் வால், குரங்கின் வாலைவிட அசஙகியமானதாகும். உடம்பில வால் முளைப்பது அசங்கியமாயிருப்பதை விட அதிக அசங்கியமாயிருக்கும் நம் முடைய தீய எண்ணங்களாலும் தீய செயல்களாலும நமமுடைய ஒழுக்கம் பழுதாவது.

ஆகவே கர்மம் என்னும் கொள்கையின்படி நாம் செய்யும் ஒவ்வொரு செயலும அதன் தன்மைக்குத் தகுந்தபடி நம்மை நலலவர்களாகவோ, கெட்டவர்களாகவோ ஆககி விடுகின்றது. இவற்றிற்கு நம்முடைய சாஸ்திரஙகள் பல பரிபாஷைச் சொற் களை உபயோகிககின்றன. ஆனல் அவற்றை நீக்கிவிட்டுச் சாதாரண பாஷையில் கூறியிருக்கிறேன். நல்ல செயல் செய்தால் நம்முடைய ஒழுக்கம் அழகு பெறுகின்றது. தீயசெயல் செய்தால் அந்த அளவுக்குத் தகுந்தவண்ணம் நம்முடைய ஒழுக்கம் பழுதாகி

விடுகின்றது. எது செய்தாலும் நாம் இந்த விஷயத்தை நினைவில் வைத்துக்கொண்டே செய்யவேண்டும். நான ஒரு நண்பர் வீட்டுக்குச செல்கிறேன். நான் தேநீர் குடிக்கும வழக்கமிலலை. அவர் தருகிறார். அதைக் குடிக்கிறேன். அந்த அளவுக்கு தேநீர் குடிப்பவன் ஆகிவிடுகிறேன். அடுதத நாள அதை அதிகந தயக்கமின்றி குடிபபேன். மூன்ருவது நாள் நானே அதைத் தேடுவேன. இனறு பொய்பேச ஆரம்பிததால அந்த அளவுககுப பொயயன் ஆகிவிடுகிரும். மறுமுறை பொய்பேசத் தயஙகிருலும் மூன்ரும் முறை நாமாகவே பொய்பேச ஆசைபபடடு விடுகிரும் நமமுடைய ஒழுக்கம் அடியோடு நாசமடைந்து விடுகினறது.

இந்த விதமாக இந்தக் கொளகை உடனேயே பலன் தருவதாயும் ஒரு நாளும நீகக முடியாததாயும உளளதாக இருககுமாகுல, நமக்கு ஒருநாளும விமோசனம கிடையாது எனறலலவா ஏற்படுகினறது? வேறு வழியிலலையா? உண்டு நம்முடைய எணணமும செயலும நமமுடைய ஒழுககத்தைத தாககுவது உணமைதான. ஆகுல அதே சமயத்தில நாம அதை பழுதுபாரததுச் சரிபபடுதத முடியும என்பதும் உணமையாகும. பிததளையாலோ, இருமபாலே ஒரு உருவம் செயகிரும். அதைத தவருக அடிததுவிட்டால பழுதாயவிடும, ஆயினும மறுபடியும அடித்து அநதப பழுதை நீககி நல்லதாகச் செயது விடுகிரும. அதேபோல நமமுடைய ஒழுககததையும் நலலதாகச் செயதுவிடலாம். ஒரு அடி ஒரு பயன தந்தால மறு அடி அதை மாற்றி அமைத்துவிடும. ஆகுல் தீய செயல ஒன்று செய்தால் அதைத திரும்பத் திரும்பச செய்யவே ஆசை உண்டாகிறது எனபதை நினைவில வைத்துக்கொளளவேண்டும. ஆதலால் ஒழுக்கம் பழுதானுல் அதைச் சரிப்படுதத அதிக கவனமும் முயற்சியும் தேவையாகும். அந்த விசேஷ முயறசியைத்தான "கழிவிரக்கம கொள்ளுதல்" என்று கூறுவார்கள். ஆகவே கர்மநியதி என்பதை யாரும் மீற முடியாது எனறு கூறும் சமயத்

திலே ஹிந்து சமயமானது எந்தகைய பாவியும் பாவத்தைவிட்டுப் புனிதனுக முடியும் என்று கூறுகிறது.

நற் செயலோ தீய செயலோ நல்லெண்ணமோ தீய எண்ணமோ அது ஒருவித ஆசையை, ஒருவித தேட்டத்தை உண்டாக்கி விடுகின்றது. மது அருந்திஞல அதைக் குடிக்க வேண்டும் என்ற தேட்டம் உண்டாவதுபோல எது செயதாலும் அதை மறுபடியும் செய்யவேண்டும என்ற தேட்டம உண்டாகிறது. "ஒவ்வொரு பொருளும மற்றொரு பொருளைக கவர்கின்றது" என்று நியூட்டன் கூறியது போலவே நமமுடைய ஹிந்து சமய மானது ஒவவொரு செயலும அதேபோன்ற செயலே, மறுபடியும செயயுமபடியான ஆவலை உணடாக்குகினறது என்று கூறுகிறது. ஒவ்வொரு செயலுக்கும இரணடு பலன்கள உண்டு மது அருநதி ஞல மயக்கம உண்டாகி செய்யத்தகாத காரியங்களைச் செயது விடுகிருேம. அதுமட்டுமனறு, மறுபடியும் அருநதவேணடுமெனற ஆவலும் உண்டாகி விடுகிறது. மயக்கம் தெளிந்துவிடும், ஆனுல் இநத ஆவல தீராது. இதுவே மதுபானம அளிக்கும சாஸவதத் தண்டனையாகும.

எனக்குக் கடன்களிருப்பதாகவும், அதனுல இப்பொழுது உடனே எனக்குப் பணம் தேவை என்பதாகவும் வைத்துக் கொள்ளுங்கள. என் தந்தை கிழவா. பணம் வைத்திருக்கிருர். அவருக்கு நீரிழிவு நோய், அதனுல் அவர் சீககிரமாக இறந்து விட்டால எனக்கு நல்லது. அதனுல் நான் மெதுவாக யாருக்கும் தெரியாமல அவரைக் கொன்றுவிடுகிறேன். யாருக்கும் சந்தேகம் உண்டாகவில்லை. அவர் நோயால் இறந்துவிட்டதாகவே எல்லோ ரும் எண்ணுகிருர்கள. அக்கம் பக்கத்தார் ஐயுற்ருல் என்னை எளனம் செய்வார்கள். அரசன் ஐயுற்ருல் தண்டிப்பான். அக்கம் பக்கத்தாரும அரசரும் அறிந்தாலும, அறியா விட்டாலும் என் ஒழுக்கம பழுதாகி விட்டதில் சநதேகமில்லை. சரி, மறுபடியும் கடன்கள் வாங்குகிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்

பொழுது என் நண்பரிடம் அதிகப் பணம் இருப்பதை அறிந்து, அவரைக் கொன்றுவிடத் தீர்மானிக்கிறேன். ஆகவே ஒவ்வொரு செயலுக்கும இரண்டு பயன்கள உணடாகின்றன. ஒன்று உடனே கிடைக்கும ராஜ தண்டனை, மற்ருென்று கர்மம் தரும் தண்டனை, அது யாது ? மறுபடியும் அதே தீய செயலைச செய்யும படியான ஆவல் உண்டாகிறதே, அதுதான கொலைக்குற்றம என்ருல உங்களுக்கு அர்த்தமாகாமல இருக்கலாம வேறு உதா ரணம் கூறுகிறேன்

காப்பி குடிக்கிறீர்கள் ; வயிறு கெட்டுப்போகிறது அது மட்டுமன்று காபபியை மறுபடியும குடிககவேணடுமென்ற ஆவல உண்டாகிறது அப்படியே காப்பி குடிக்கும வழககம ஏறபட்டு விடுகிறது, அந்த நோயைக குணபபடுத்த முடிவதிலலை ஆகவே கர்மம் என்னும் நியதியை அறிந்துகொளள வேணடுமானுல, ஒவ்வொரு செயலுககும இந்த விதமாக ஏற்படும இரணடு பயன களையும அறிந்துகொளளவேண்டும. காபபிககுடிப பழககததை ஒழிககவேணடுமானுல அதறகுப பதிலாக வேருென்று குடிககும வழககததை உணடாககிக கொளளவேணடும அதுபோல தீய செயல செய்வதை நிறுத்த வேணடுமானுல நலலசெயல செய்யும வழக்கததை ஏற்படுத்திக கொளளவேணடும ஆகவே காமம என்னும நியதிபபடி நடகக விரும்பினுல, நாம் எபபொழுதும நம்முடைய ஒழுககததை அருஞ செலவமாகக கருதி நடகக வேண்டும. கண்ணுடிச சாமானகளை ஒரு கோணிபபையில போட்டுச் சுமந்து கொண்டுபோனுல், யாரும அறியமாட்டார்களா. இடித்து விடுவார்கள, உடைந்துபோகும. அதனுல வெகு ஜாககிரதையாக நடந்துசெலவோம். அதுபோல நடந்துகொள்ள வேண்டும்.

கர்மம் என்னும் கொள்கையைக் கைக்கொண்டால் விமோசனமே கிடையாது என்று யாரேனும் கூறினுல் அது

தவறு. பிழைகளைத் திருத்திக்கொள்ளப் போதிய சுதந்திரம் தருகிறது ஹிந்து சமயம் என்று கூறுங்கள்.

மனத்தில் எழும் தீய எண்ணங்களை யெல்லாம் அகற்றி விடவேண்டும். ஒரு தீய எண்ணத்துக்கு இடம் தந்தால் உடனே கோட்டைத் துவாரத்தின் வழியாக பகைவருடைய படைகள் நுழைவது போல, ஆயிரக்கணக்காக வந்து நுழைந்துவிடும். புத்த மதம், சமண மதம் உள்பட இந்தியாவில் தோன்றும் சகல மதங்களும் கர்மம் என்னும் கொள்கையை ஏற்றுக்கொள்ளுகின்றன. மற்ற கொள்கைகளைப்பற்றி அவைகள் சண்டைபோட்ட போதிலும் நம்முடைய ஜனங்களின் அனுபவங்களின் காரணமாக இந்த கர்மம் என்னும் கொள்கையை மட்டும் ஏற்காமலிருக்க முடிய வில்லை.

இந்த ஜன்மத்தின் தொல்லையே போதும், வேறு ஜன்மங்கள் வேண்டாம் என்று மறு ஜன்மத்தில் நம்பிக்கையில்லாத ஜனங்கள் தான் இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலும் உள்ளவர்கள். ஆனால் அவர்கள்கூட எந்தத் தீய செயலும் ஒழுக்கத்தைக் கெடுக்கின்றது என்னும் உண்மையை ஒப்புக்கொள்கிறார்கள். அதனால் தங்கள் வாழ்வைத் தூயதாக வைத்துக்கொள்ள முயன்று வருகிறார்கள். இன்னும் ஒரு அடி எடுத்து வைத்தால் நாம் எல்லாரும் பரம்பொருள் ஒன்றின் பகுதிகளே என்பதையும் அதனால் நாம் ஏதேனும் தவறான காரியம் ஒன்று செய்தால் அது உடம்பில் ஏற்படும் வயிற்று நோய் போல பரம்பொருளிடம் உண்டாகும் நோயேயாகும் என்பதையும் அறிந்து கொள்வோம், நான் என் ஒழுக்கத்தைக் கெடுத்துக் கொண்டால் அந்த அளவுக்கு நான் பரம்பொருளையும் கெடுத்தவனாகிறேன். ஆதலால் தீயசெயல் எதுவும் செய்யாதிருக்க வேண்டும். நம்மையும் பரம்பொருளையும் தூய்மையாகவைத்துக் கொள்ளுதல் நம்முடைய கடன்,

முஸ்லீம்கள் ஹிந்து மதத்தை நன்கு அறிந்து கொள்வதோடு தாங்கள் பிறந்த நாட்டிலுள்ள ஒரு பெரிய சமயமாதலால்

அதுபற்றி ஒருவிதமான பெருமையும் கொள்ள வேண்டும். நான் அரேபியாவில் பிறந்த ஹிந்துவா யிருந்தால மகமதுநபி பற்றியும் இஸ்லாம் பற்றியும் பெருமையே கொளவேன். மகமது நபியை பற்றியாரேனும் இழிவாகக் கூறினால அவரிடம கோபம அடை வேன். இஸலாம்மதத்தை அறிந்து கொளவதை என்னுடைய முதற்கடமையாகக் கருதுவேன். அதேபோல் பாலஸ்தீனத்தில் ஒரு ஹிந்துவாக பிறந்தால கிருஸ்துவ மதத்தை அறிந்து கொள வதைக் கடமையாக எண்ணுவேன. எப்படி பிரிட்டிஷார ஹிந்துக் கோயிலகளையும முஸ்லீம மசூதிகளையும பாதுகாக்க பணம செலவு செயகிறார்களோ, அப்படிக் கிருஸதுவக கோயிலகளையும பாதுகாககப பணம செலவு செயய வேண்டும என்று கூறுவேன.

ஆதலால் நீங்கள எல்லோரும ஹிந்துமதம கூறும இந்தக் கர்மம் என்னும் கொளகையை அறிந்து கொளளக் கேட்டுக் கொள் கிறேன் இந்தியாகளாயுள்ள கிருஸதவாகளும் முஸலீமகளும் கூட அறிந்து கொள்ள வேண்டும என்றே கூறுவேன். கர்மம் என்னும் கொளகைதான் ஹிந்துசமயத்தின சாரமாகும, அதுதான் ஹிந்து சமயம்.

சமூக சீர்திருத்தம்

★

சமூக சீர்திருத்தம் நல்லது, அவசியமும்கூட, ஆனால் அதைச் செய்யும் பொழுது நாம் துவேஷம், கோபம் முதலியவை களை அறவே துறந்து விடவேண்டும். சீர்திருத்தத்தில் மட்டுமே நாம் கண்ணும் கருத்துமாயிருக்கவேண்டும் இந்த விஷயத்தில் நாம் நமமுடைய பெருமையைப் பொருட்படுத்தலாகாது. உலக மும், நாகரிகமும் முன்னேறிக்கொண்டிருக்கின்றன நானே நீங்க ளோ ஏதோ பிரமாதமாகச் செய்து சாதித்து விடப்போவதாக எண்ணிவிடலாகாது ஒவ்வொருவரும் தத்தம் வழியில் சமூக சீர்திருத்தத்துக்குச் சேவை செய்ய இடங்கொடுத்து விட வேண் டும் ஒருவரகையாளும் முறைகளில் மற்றவர்கள் தலையிடலாகாது. இந்த விஷயத்தில் ஒவ்வொருவரும் தத்தம் மனதுக்கும், திறமைக் கும் உகந்த விதத்திலே சேவை செய்வதே நல்லது. இதுபற்றி எல்லோரும் அனுஷ்டிக்க வேண்டிய பொது விதியாதெனில், எந்த முறையைக் கையாண்டாலும் நல்லெண்ணத்துடனேயே செய்ய வேண்டும் என்பதேயாகும்.

எது அதிக முக்கியம், எது அதிக முக்கியமில்லை என்று நாம் சண்டையிட்டுக்கொள்ளலாகாது மழைபெய்தால் அநேக விதமான செடிகள் முளைக்கின்றன, அதுபோல ஜன சமூகத்தில் புதிய உயிர் தோன்றும்பொழுது அநேக விதமான காரியங் கள் நடைபெற ஆரம்பிக்கின்றன. எதைமுதலில் செய்யவேண்டும் என்பது பற்றி நாம் ஒருவருக்கொருவர் வாதாடிக் கொண்டிருக்க

லாகாது. அவரவர் மனத்திற்கு பிடித்த நல்ல காரியத்தைச் செய்யலாம். தேசம் சுதந்திரத்துக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கும்போழுது, தாகூர் கவிகள் இயற்றிக்கொண்டிருக்கிருரே என்று அவர் விஷயத்தில் தலையிடலாகாது. அதுபோல் சி, வி. ராமன் தீண்டாமையை ஒழிக்கப் பாடுபடவேண்டியதை விட்டுவிட்டு அணுசக்தி சம்பந்தமாக ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிருரே என்று அவரிடம் சண்டையிடக்கூடாது. மழைபெய்வது போல வும் வெயில காய்வது போலவும் சகலவிதமான காரியங்களும் நடைபெற வேண்டியனவே. ஒவ்வொருவரும் அவரவர் சக்திக்கு உகந்தவண்ணம் சேவை செய்யவிட்டுவிடவேண்டும.

தாம செய்யும் காரியம்தான் முக்கியமானது என்று ஒவவொரு வரும் கர்வம் கோள்வது சகஜம். அப்படி நாம கர்வம் கோள்வோமானல், பிறர் கர்வத்துக்கு ஏன் பங்கம் விளைவிக்க வேண்டும்? ரயில்வண்டி ஓடும்போழுது அதிலுள்ள ஒவ்வொரு பகுதியும் அதிர்ச்சியடைகின்றது. அதைக் கண்டு சககரமானது மற்றப பகுதிகளைப் பார்த்து "இதோ பாருங்கள், நீங்கள ஏன் அதிர கிறீர்கள்! நான்தானே வண்டியை இழுத்துச் செலகிறேன்" என்று கேட்கலாமோ?

நான் எச்சரிக்கை கூறவேண்டிய மற்ருெரு விஷயம் —இது: குற்றங் குறைகளைக் கண்டுபிடி; ஆனல மக்களை மட்டும் தாக்காதே. குற்றங்களை எடுததுக் காட்டு; ஆனல யாரையும் வையாதே. போன ஜன்மததில் செய்த பாவ புண்ணியங்கட்குத் தக்கவாறு மக்களைக் கடவுள் சிருஷ்டிக்கிருர். அத்துடன் அவர்கள் பிறந்து வாழும் சூழ்நிலைக்குத் தக்கவாறு மாறுதல்களும் அடைகின்றனர். அதனல் நாம் எலலோரிடமும் இரக்கமுடைவர்களாயிருக்க வேண்டும. இதை மனதில் வைத்துக் கோண்டு குறைகளை மட்டும் தாக்கவேண்டுமேயன்றி, குறையுடைய மக்களைத் தாக்கலாகாது என்று எண்ணிக் காரியம் செய்தால் மட்டுமே நாம் எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவோம். மக்களைத் தாக்குவதில் மகிழ்ச்சி காண்போமானல், எதிர்ப்பும் சண்டை

சச்சரவுகளுமே சிருஷ்டி செய்து கொள்வோம். நான் கூறும் வேறுபாடு வெகு நுண்ணியதாகத் தோன்றலாம். ஆனால் இந்த வேறுபாட்டை நினைவில் வைத்துக் கொண்டு, மக்களை மறந்து சீர்திருத்தம் மட்டுமே செய்வோமானால் நம்முடைய சேவை வெகு விரைவில பலன் தரும்.

பிறர் என்னை வைதால், நானும் அவர்களை வைய வேண்டு மென்ற அவசியம் கிடையாது மற்றவர்கள பொறுமையற்றவர் களாயிருந்தால், அது தவறு என்று குறை கூறுவது நமது கடமை என்று நாம் எண்ணிவிடலாகாது. பிறர் பொறுமை யில்லாமலிருந்தால் என்ன? நாம் பொறுமையோடிருப்போம். பிறர் பொறுமை இழந்தால் அதற்காகக் கவலைப்படவேண்டாம். சர்வலோக சஞ்சீவியாகிய அன்பைப் பயன்படுத்துங்கள். அது அற்புதமாகக் குணபபடுத்திவிடும்.

சிலர் மதத்தையே அழித்துவிட விரும்புகிறார்கள். மதம் முற்றிலும் பயனற்றதாகவும், பொய்யானதாகவும் ஆகிவிடுமானல் பாம்பு சட்டை கழற்றுவதுபோல் அதை அழித்துவிட வேண்டி யது அவசியம்தான். ஆனால் பாம்பு சட்டையை நீக்கிவிடுகிறதே யன்றி, அது இறந்துபோவதில்லை. அதுபோல் மதத்தில் சேர்ந்த அழுக்குகளை நீக்கிவிட வேண்டுமே யன்றி, மதத்தை அழித்துவிட வேண்டியதில்லை. பாம்புக்கு உயிர் தோலன்று; ஆனால் பாம்பு உயிர் வாழ்வதற்குத் தோல் அவசியமாகும். இந்தியா தேசத்தில் மதத்தை அழித்துவிட்டால இந்தியா இறந்து போகும் என்பது என் கருத்து. மதத்தை அழித்து இந்தியாவைப் புனருத்தாரணம் செய்ய முடியாது. ஜனங்கள் மதங்களின் பெயரால் சண்டை யிட்டுக் கொண்டிருக்கிறார்கள. அதை நாம் நிறுத்த வேண்டும். அதற்காக நாம் மதத்தையே அழிதது்விட வேண்டிய அவசிய மில்லை. சிலர் சமூக சீர்திருத்த விஷயத்தில் நமக்கு மாறான கருத்துடையவர்களாயிருந்தால், அதற்காக சமூக சீர்திருத்த வேலையையே விட்டுவிட வேண்டுமென்று கருதுகிறீர்களா?

அறிவைக் குழம்பவிடலாகாது. அன்பு உணர்ச்சியைக் கைவிடலாகாது அத்துடன் பணிவுக் குணத்தையும் அடிக்கடி புதுப்பித்துக் கொள்ளவேண்டும். இல்லையேனில் நாம் கவலைப் படவும் செய்வோம். எந்தக் காரியத்தையும் செய்யாதவர்களாக ஆகிவிடவும் செய்வோம்.

உங்களிடம் இன்னுமொரு விஷயம் கூற விரும்புகிறேன். இப்பொழுதுள்ள மக்களைத் தாக்கினாலும் முன்னோர்களைத் தாக்கலாகாது. அப்படிச் செய்தால் அநேக விதமான கசப்புகளும், பகைமைகளும் உண்டாகும் அத்துடன் அது நியாயமற்றதாகும். உயிரோடுள்ளவர்களைத் தாக்கக் காரணங்கள் காணலாம். ஆனால் இறந்துபோனவர்களைத் தாக்கப் போதுமான காரணங்கள் காணமுடியாது ஆதலால் பதில் சொல்ல முடியாத நிலைமையிலுள்ள இறந்தவர்களைத் தாக்குவதைத் தயவு செய்து விட்டுவிடுங்கள். இப்போது மேனாட்டு அறிஞர்கள் கண்டு பிடிக்கக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் அநேக உண்மைகளை நம்முடைய முன்னோர்கள் கண்டு கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் பெரிய மனிதர்கள். நம்முடைய பெரிய மூலதனம் நம்முடைய முன்னோர்கள் தந்துள்ள ஞானம்தான். தற்காலத்து கணித சாஸ்திரத்துக்கு அஸ்திவாரமாகவுள்ள தசாம்ச முறையானது இந்தியாவிலேயே கண்டுபிடிக்கப்பட்டது என்பதைப் பற்றி நான் பெருமை கொள்கிறேன். அதுபோலவே தற்காலத்தில் காணப்படும் விஞ்ஞானமானது இந்திய தேசத்திலேயே ஆதியில் உற்பத்தியாயிற்று என்பதை அறியவும் நாம் பெருமைகொள்கிறேன். நம்முடைய முன்னோர்கள் முட்டாள்களும், ஏமாற்றுக்காரர்களும் அல்ல. அவர்கள் உண்மையை நாடினார்கள். அதனால் அருமபெரும் காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள்.

நாம் ஜாதி வேறுபாடுகளை ஒழிக்க விரும்புகிறோம். இந்திய மக்கள் எல்லோரையும் ஒரே சமூகமாக ஒன்று சேர்க்க விரும்புகிறோம் அப்படியே செய்வோம். ஆனால் ஜாதி என்பதைச் சிருஷ்டித்த

வர்கள், அயோக்கியர்கள் என்று எண்ணிவிடலாகாது. அந்தக் காலத்தில அது பயனளிபபதாயிருந்தது. அதனால்தான உற்பத்தி யாயிற்று. அது அவசியமிருநததாலதான் நிலைகக முடிந்தது. நமககு அது தேவையிலலை என்பதற்காக நமமுடைய முன்னோர் களைக் குறைகூறக கூடாது. நாற்காலி செயயத தயாராகவுளள மரததில பட்டை யிருககுமானால அதை இறக்கமின்றி உரித்து நீககி விடுகிறோம். அதை வைததுப பட்டை உணடாயிருக்கவே கூடாது என்று கூறலாமா? நீண்ட நாளாக வளர்ந்த மரத்தின் உயிருககே அது அவசியமல்லவா? அது மரததின் ஜீவாம்சமான ஒரு பகுதியே அலலவா? இபபோது அது நமககுத் தேவை யிலலை எனறால, அதைச சீவி எறிநது விடுவோம அதற்காக "ஏன் இநத உபயோகமறற பட்டையை உணடாக விட்டாய?" எனறு தோட்டககாரரைக கோபிததுக கொளளலாகாது. ஜாதி முறை அந்தக காலததில அவசியமாயிருந்தது, ஜன சமூக மரத் தைக காப்பாறறியது, ஆனால இனறு அது வெட்டி எறிய வேணடிய வெறும பட்டையாகவே யிருக்கிறது. அதனால அதைச சீவி எறிநதுவிடலாம ஆனால அதறகாக நமது முன்னோர் களுடைய நறபெயரை இழிவுபடுத்த வேணடாம, அபபடிச செய் தால பகைமைதான உணடாகும. அதனால அதைச செய்ய லாகாது. நமமுடைய சீர்திருதத வேலைககு அது உதவி செய்யாது.

சரியான வழியில சென்றால் ஜெயம காண்பது நிச்சயம். ஜெயம கண்டுவிட்டால வேலையை எலலாம் நிறுததிவிட வேண்டி யதே எனறு எணணிவிட வேண்டாம. இளைஞர்கள் அதைரியப படலாகாது.

தண்ணீரில் விழுந்தவன் தததளிபபது போல, நாம் தததளித் துக் கொண்டிருககிறோம. கரை சேரவேண்டியதே நமமுடைய பிரதானமான நோககம். அதை மறநதுவிட்டு நமககுள் சண்டை யிட்டுக் கொண்டிருககலாகாது நமககுப் பலமில்லாவிட்டா

லும், வெற்றி கிடைக்கா விட்டாலும் கடவுளிடம் பிரார்த்தனை செய்ய வேண்டுமேயன்றி, பிறரிடம் குறறம் கண்டு பிடிப்பதி லேயே திருப்தி அடையலாகாது. குற்றம் கண்டுபிடிப்பது சேவை யாகாது. நாம் தீவிரவாதிகள்; நம குறைகளை அறிய முயல்வ தில்லை. மிதவாதிகளுடைய குறைகளை காண்பதிலும், அவர் கள் வைவதிலும் ஈடுபட்டிருக்கிறோம். மிதவாதிகளும அதே காரியத்தைத்தான் செய்கிறார்கள். இந்தப் போறியில் விழாதபடி நீங்கள் ஜாக்கிரதையாக நடந்து கொளள வேண்டும. ஆகவே எந்த வேலை செய்ய ஆரம்பித்தாலும் உஙகளால் செய்யக் கூடியதைச் செய்யுங்கள, பிறர் மீது பழியைச் சுமத்த முயலா தீர்கள்.

தோட்டி வேலை

★

"நம்மில் யாருக்குத் தோட்டி வேலை செய்யப் பிரியமிருக்கிறதோ அவர்கள் செய்யலாம்" என்ற யோசனையை நம்மில் சில சகோதரர்கள் பலமாக எதிர்ப்பதாக அறிகிறேன். அவர்கள் பல விதமாக ஆட்சேபங்கள் கூறுகிறார்கள்.

தாய்மார்கூடக் குழந்தைகளைக் கவனித்துக் கவனித்து அலுத்துப் போய்விடக் கூடும். அதே போன்ற எண்ணம் தோட்டிக்கும் ஏற்படக் கூடுமல்லவா? நானேதான் எப்போதும் உங்கள் ஆபாசங்களை அப்புறப்படுத்த வேண்டும் என்று ஏன் நீங்கள் எண்ணுகிறீர்கள்" என்று அவர் கேட்கலாமல்லவா? அதிகாரிகள் தோட்டியை ஆபாசங்களை அப்புறப்படுத்தும்படி கட்டளையிட வேண்டும் என்று கருதுகிறீர்களா? அல்லது இந்த வேலை செய்வதற்காக கடவுளேதான் தோட்டியைப் படைத்தார் என்று கருதுகிறீர்களா? அல்லது அதிக நாள் அனுபவத்தின் காரணமாகத் தோட்டிதான் நம்மை விட நல்லவிதமாக அந்த வேலையைச் செய்யக் கூடுமாதலால், அவரேதான் செய்ய வேண்டும் என்று கருதுகிறீர்களா?

அசுத்தங்கள் நீக்கப்பெற்று சுகாதாரமான நிலைமையை உண்டாக்குவதற்கு மனிதர்களை உபயோகிக்காத முறைகள்

வதுக்கப்படவேண்டும். ஆயினும் அதுவரை ஒரு குறிப்பிட்ட வகுப்பாரை இந்த வேலையைச் செய்யுமாறு தண்டிககவேண்டுமா? நாம இநத வேலேயை மேறகோணடால் பிறகு அதிகாரிகள நம்மையேதான் எபபொழுதும செயயுமாறு செயது விடுவாாகள் என்று சிலர் எணணுகிருாகள. ஆனால அநத பயததுக்கு ஆதாரம் கிடையாது இதில' கட்டாயம எனபது கிடையவே கிடையாது. அதற்குப பதிலாக இதை நாம ஏற்றுக கோண்டால நம்மிடம் அதிகாரிகளுககு அதிக மரியாதையே ஏறபடும்.

நாம இதைச செயய ஏற்றுக் கோண்டுவிட்டு, பிறகு செயயாமல் நிறுத்திவிட்டால் அபபொழுது தோட்டிகள கிடையாமல போவாாகள் என்று பயபபடுவதறகும ஆதாரம கிடையாது. அவாகள் எபபொழுதும இருநது கொணடிருககிறார்கள. அவாகள் மறைநதுவிடப போவதில்லை. தோடடிகள தோட்டிகளாகவேதான இருகக வேணடும எனபதுதான அரசாஙகததின விருப்பமும. நீஙகள செயவதாகச சொன்னாலகூட இநத வேலேயை அரசாஙகததார உஙகளிடம எளிதில ஒபபடைத்து விடபபோவதில்லை.

காங்கிரஸில சேர்நதால இநத மாதிரி வேலேயெலலாம் செய்ய வேண்டும் போலிருககிறது என்று பயந்து அநேகா தேசீய இயககத்தில கலநதுகோளளமாட்டாாகள, அதனால நமககு பலஹீனமே உண்டாகும என்று சிலா சநதேகப படுகிறாாகள. இதுவும் முற்றிலும தவறு ஆமதாபாத நகரத்தில படித்த காங்கிரஸகாரர்கள சில சமயஙகளில இநதத் தோட்டி வேலேயை மேற்கோண்டாாகள அதைக கண்டு ஜனஙகள பயநதுபோய, காஙகிரஸில சேராமல நினறுவிடவில்லை அதறகு மாருக அவர்கள அதன காரணமாகக காநதிஜியிடம முனனிலும் அதிகமான பக்தியே கோளளலானார்கள

உணமை என்ன என்பது எனக்குத் தெரியும், தோட்டி வேலே செயவதை ஆட்சேபிபபவாகள நலலதோா வாதத்தைக கண்டுபிடிக்கத் தம்முடைய மூளையை எவவளவோ கலக்கிப்

பார்க்கிறார்கள். ஆனால் உண்மையான காரணம் யாதெனில் நாம் செய்ய விரும்பாமலிருக்கும்போது பிறரைச் சொல்வது எப்படி என்று எண்ணுவதேயாகும். அது நல்ல நோக்கம்தான். அதனால் இந்த வேலையை மேற்கொள்ள விரும்புகிறவர்கள் இதை மேற்கொள்வதால் எவ்விதப் பெரிய தியாகத்தையும் செய்துவிடவில்லை என்று, இதனால் எவ்விதத் துன்பமும் அனுபவிக்கவில்லை என்று அவர்கள் மனத்தில் பதியும்படி செய்ய வேண்டும். அந்தப்படி செய்தால் ஆட்சேபிப்பவர்கள் ஆட்சேபிப்பதை நிறுத்துவதோடு மட்டும் நிற்காமல் வேலையை எளிதாக்கும் முறையில் நம்முடன் ஒத்துழைக்கவும் செய்வார்கள்.

மிதவாதிகள் நம்மைப் பார்த்து "சிறைக்குப் போக வேண்டாம். எதற்காகப் போகவேண்டும்?" என்று கூறுகிறார்கள். அவர்கள் சிறைக்கு வெளியே யிருக்கும்பொழுது நாம் சிறைக்குள் இருப்பதை அவர்கள் விரும்பவில்லை. ஆனால் நாம் அவர்களுக்கு என்ன பதில் கூறுகிறோம்? நாங்கள் சிறையில் சந்தோஷமாகவே யிருக்கிறோம். நாங்கள் துன்பப்படாமலிருக்கும்பொழுது நீங்கள் பரிதாபப்படுவானேன்? என்று நாம் கூறுகிறோம். நான் வக்கீல் வேலையை விட்டவுடன் என்னுடைய பந்துக்களில் ஒருவர் அழுதுவிட்டார். வக்கீல் வேலையை விட்டதால் எனக்கு மனவருத்தம் ஏற்பட்டதாக எண்ணி எனக்கு ஆறுதல் கூறினார். ஆனால் அறிவில்லாத நீதிபதிகள் முன்பும், பிடிவாதமான நீதிபதிகள் முன்பும் வழக்காடவேண்டிய வேலையை விட்டதற்காக நான் உண்மையில் சிறிதுகூட மன வருத்தப்படவில்லை. அதுபோல தோட்டி வேலை செய்ய விரும்புகிறவர்கள் அதைச் சந்தோஷத்துடனேயே செய்கிறார்கள். யாரும் அவர்களுக்காக இரக்கப்படத் தேவையில்லை.

மகாத்மாஜி பொதுஜன ஊழிய வேலையைத் துவக்கிய காலத்தில் தொழில் செய்வதன் மகிமையைப் பற்றியும், கீழ் வகுப்பார் செய்யும் வேலைகளை யெல்லாம் மேல் வகுப்பாரும் செய்யவேண்டிய அவசியத்தைப் பற்றியும் வற்புறுத்தி வந்திருக்

கிறார் எந்த வேலையையும் செய்யப் புகுந்தால்தான் அதிலுள்ள கஷ்டங்கள் தெரியவரும் வெறும் பேச்சாலும், வாதத்தாலும் தெரியவராது இந்தத் தோட்டி வேலை யோசனையைக் கூறியதற்காக சிலர் கோபம் கொண்டிருப்பதை அறிவேன் அவர்கள் என்னிடம் பொறுமை காட்ட வேண்டுமென்று விரும்புகிறேன். நாம் ஒருவருக்கொருவர் சகிப்புத்தன்மை காட்டக் கூடுமானால் எவ்வளவோ நலமாயிருக்கும். தோட்டி வேலை செய்வதில் வெற்றி பெறாவிட்டால்கூட பாதகமில்லை நாம் சகிப்புத்தன்மை காட்டக் கற்றுக் கொண்டால் போதும், அதுவே பெருத்த லாபமாகும்

நாம் செய்யும் காரியங்கள் எல்லாம் எப்பொழுதும் அதிகமாக யாதொரு இடையூறுமின்றி நடைபெற வேண்டும் என்று எண்ணினால், நாம் உலகத்தில் எந்தக் காரியத்தையும் செய்து முடிக்கமாட்டோம் "தோட்டி வேலை செய்ய ஆரம்பித்தால் சத்தியாக்கிரகம் செய்வோம்" என்று சிலர் பயமுறுத்துவதாகக் கேள்விப்படுகிறேன் இது விஷயத்தில் சத்தியாக்கிரகம் செய்வது தவறு.

தவறான நோக்கங்களுக்காகச் சத்தியாக்கிரகம் செய்தால் அது சத்தியாக்கிரகமன்று, பலாத்காரமே யாகும் மகாத்மா சர்க்காரிடம் கேட்கும் கோரிக்கைகளை முழுவதையும் யாதலால், அவரைக் கேட்காதிருக்கும்படி செய்வதற்காக ஸ்ரீநிவாச சாஸ்திரியாரும், சர் தேஜ்பகதூர் ஸப்ரூவும் சத்தியாக்கிரகம் செய்ய ஆரம்பிக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம் அப்பொழுது அதுபற்றி நீங்கள் யாது கூறுவீர்கள்? மகாத்மாவின் இதயமானது சாஸ்திரியார் தற்கொலை செய்வதைக் காண சகியாது தான். ஆனால் அதற்காக அவர் இந்தியாவின் பொருட்டு அரசாங்கத்திடம் கேட்கும் கோரிக்கைகளை விட்டுவிட முடியுமா? சாஸ்திரியாருக்கும், காந்திஜிக்குமிடையில் உள்ள வாஞ்சை எவ்வளவு அதிகம் என்பதை அறிவேனாதலால் இந்த உதாரணத்தைக் கூறினேன் ஆனால் மகாத்மாவுக்கு விரோதமாகச்

சத்தியாக்கிரகம் சேய்பவர், வெறும் பலாத்காரமே யாரும் என்னைச் சாஸ்திரிகள் அல்லர். ஆதலால அவர் அதில் இறங்க மாட்டார். தவறான நோக்கங்களை சாதித்துக் கொள்வதற்காக ஏற்பட்டதல்ல சத்தியாக்கிரக முறைகள் என்பவை. பாஷாணத்தை மருந்தாக உபயோகிக்கலாமேயன்றி, மக்களைக் கொல்லுதற்கு உபயோகிக்கக் கூடாது.

சத்தியாக்கிரகம் என்னும் புதிய ஆயுதத்தை வரவேற்கும் இளைஞர்களே! அதைத் தவறாக உபயோகியாதீர்கள் என்று எச்சரிக்கின்றேன். சத்தியாக்கிரகத்தை தவறாக உபயோகித்தால் அதுவே சுதந்திரத்தை இழந்துவிடும். சகல மக்களுக்கும் செயல் சுதந்திரம் அளிக்க வேண்டும். பிறர்க்குத் துன்பம் விளைவிக்காத அளவு பேச்சு சுதந்திரமும், செயல் சுதந்திரமும் வழங்க வேண்டும். ஒவ்வொருவரும் தவறு செய்வதிலிருந்து விஷயங்களைக் கற்றுக் கொள்ளவும் விட்டுவிட வேண்டும். இந்த மனோபாவத்தை மேற்கொண்டால் அப்பொழுது சகிப்புத் தன்மையும், சமாதானமும் உண்டாகி விடும்.

புதிய யோசனைகள் செய்யாவிட்டால் முன்னேற்றம் என்பது ஒருநாளும் நடைபெறாது. சோதனைகள் செய்தால் எப்பொழுதும் சிறிது சேதம் உண்டாகவே செய்யும். அதனால் தைரியம், ஜாக்கிரதை இரண்டும் தேவையாகும். நமக்குக் கிடைக்கும் நல்ல சந்தர்ப்பங்களைக் கவனியுங்கள். ஒரே நோக்கமுடைய ஒரு கூட்டத்தாரை இப்போது காண்பதுபோல எப்போதும் காண முடியாது. இத்தகைய காரியங்களை இப்போது செய்ய முடியாவிட்டால் வேறு எப்போது செய்யப் போகிறோம்? சிறைக்கு வெளியே போனபின் தோட்டி வேலை செய்ய முடியும் என எண்ணுகிறீர்களா? சிறையில் அதற்கு வேண்டிய வசதிகள் யாவும் உள. கேலி செய்ய நண்பர்களுமிலர், ஆட்சேபிக்க உறவினருமிலர். இந்த வேலையை மேற்கொண்டால் உண்மை

யான சகோதரத்துவத்துக்கும், ஜாதி ஒழிப்புக்கும் அடிகோலியவர்களாவோம்.

சென்ற நூற்றாண்டில் மேல் நாடுகளில் உயர்ந்த குடும்பத்தினர் தாழ்ந்தவர்களுடைய வாழ்க்கையையும் சுவைத்துப் பார்க்க விரும்பி அவர்களுடன் போய் வசிப்பது வழக்கம். ஆர்க்டிக் மகா சமுத்திரத்துக்குப் போகிறார்களே, அது போன்ற ஒரு துணிச்சல். அத்தகைய துணிச்சல்தான் உண்மையான வாழ்க்கையின் அடையாளம். சும்மா ஊறி வருவதன்று வாழ்க்கை என்பது. அந்த மாதிரி எந்தச் சோம்பேறியும் நடக்க முடியாது.

நாம் தோட்டி வேலை செய்ய ஆரம்பித்து அதை வெற்றிகரமாகச் செய்து முடிப்போமானால், அதுதான் சத்தியாக்கிரக சரித்திரத்தின் அதிகப் புகழ் வாய்ந்த அத்தியாயமாயிருக்கும். அதில் எவ்வித கஷ்டமும் கிடையாது. குளிப்பது கஷ்டமானால் அதுபோன்ற கஷ்டந்தான். தினந்தோறும் பிறர் தேய்த்துக் குளிப்பாட்டிவிட்டு, இன்று நாமே தேய்த்துக் குளித்தால் அதைக் கஷ்டம் என்று கூறுவோமா? அடிமைத் தனத்தை ஒழிப்போம் என்று கூறினால், உடனே நம்மைக் கஷ்டப்படுத்திக் கொள்கிறோம் என்று கூறலாமா? பிறரைக் கட்டாயப்படுத்தி அகௌரவமான வேலையைச் செய்யும்படி செய்யும் அடிமைத்தனத்தை மேனாட்டார் ஒழித்துவிட்டார்கள். பிறரைத் தோட்டி வேலை செய்யும்படி நாம் கட்டாயப்படுத்தும் வரை நாம் அடிமைத்தனத்தை ஒழித்தவர்களாக மாட்டோம். என்றைக்கு நாம் வெற்றிகரமாகத் தோட்டி வேலையைச் செய்கிறோமோ, அன்றைக்குத்தான் அந்த வேலை கௌரவமுடையதாக ஆகும். அதன் பிறகு அந்த வேலையை யார் செய்தாலும் அது சுதந்திரமாகச் செய்யும் கௌரவமான வேலையாகவே யிருக்குமன்றி, கட்டாயத்தின் மேல் செய்யும் ஒரு ஈன ஜாதித் தொழிலாக இராது.

நான் அதிகம் கூறிவிட்டேன். காந்திஜி பெயரைக் கூறுவோர் இது விஷயத்தில் ஆட்சேபம் கூற உரிமை கிடையாது. அதனால் இவ்வளவு தூரம் இதைப் பற்றி விவாதிக்க வேண்டிய அவசியமில்லை. ஆயினும் பிறர் என்ன சொல்வார்களோ என்று எண்ணியோ அல்லது நாமும் சேர்ந்து கொள்வது தான் கௌரவம் என்று எண்ணியோ யாரும் இந்த வேலையில் இறங்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

"தீமையை எதிர்க்காதே"

உங்கள் அறிவு, வானத்திலுள்ள நட்சத்திரங்கள் வரை எட்டக் கூடியதாயிருக்க வேண்டும். அப்பொழுதுதான் நீங்கள் உண்மையை அறிய முடியும். நீங்கள் உங்கள் மனத்தைச் சுருக்கிக் கொள்வீர்களானால் நீங்கள் பொய்யிலேயே உழல்வீர்கள்.

நீங்கள் முதலாவதாக பிரபஞ்சம் எத்துணை பெரியது என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். ஒவ்வொரு நட்சத்திரமும் சூரியனைப்போல் சந்திரன், கிரகங்கள் முதலியன உடைய ஒரு குடும்பமேயாகும். நம்மில் மிக மிக உயர்ந்த அறிவு படைத்தவர்கள் அறிந்திருப்பது கூட அணுமாத்திரமேயாகும். அவர்கள் அறியவேண்டியது அறிந்துள்ளதைவிட ஆயிரக் கணக்கான மடங்கு பெரியதாகும். ஆயினும் நாம் பேசவும், செயலாற்றவும் வேண்டியவர்களா யிருக்கிறோம். நாம் எந்த விஷயத்தையும் மிகுந்த பணிவுடனேயே ஆராய வேண்டும். பிரபஞ்சத்தின் ரகசியங்களில் மிகச் சிலவே மக்கள் அறிந்துள்ளனர். அதிலும் ஒருவன் அறிந்துள்ளது அணுவிலும் அணுவேயாகும். நான் பேச நீங்கள் கேட்க என்றால் அதிலிருந்து உங்கள் அறிவு எத்துணைச் சிறியது என்பது விளங்குமல்லவா! ஆதலால் அறிவு தேடும் விஷயத்தில் நாம் அதிகப் பணிவும்,

அடக்கமும் உடையவர்களாயிருக்க வேண்டும் என்பது புலனாகும்.

நாம் உலகத்தை ஜடப்பொருள் என்றும், சக்தி என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஜடப்பொருள் பலவிதமான உருவங்களை ஏற்றுக் கொள்ளுகிறது என்பதை அறிவீர்கள். அதுபோலவே சக்தியும் பலவிதமான உருவங்களை ஏற்றுக் கொள்கிறது. யாந்திர சக்தி என்பது ஒரு அம்சம். நாம் ஏதேனும் ஒரு வஸ்துவைத் தாக்கும்போதும், ஏதேனும் ஒரு வஸ்துவை அழுத்தும்போதும், எஞ்சின் ரயில் வண்டியை இழுக்கும் போதும், நாம் சண்டையிடும் போதும், யந்திர சக்தியைக் காண்கிறோம். ஒருவன் ஒரு வீட்டை இடிக்கும் போதும் கட்டும் போதும் இந்த சக்தியைத்தான் உபயோகிக்கிறான். இதுபோலவே உஷ்ணம் சக்தியின் ஓர் உருவமே. ஒலியானது பிறருடைய மனத்தை எட்டி நம்மிடம் கோபம், சோகம், பயம் முதலிய பல நிலைமைகளை உண்டாக்குகிறது. சக்தியின் மற்றொரு உருவம் தான் ஒளி என்பது. ஒளி என்பதும் அத்தகைய உருவங்களில் ஒன்று. ஒன்றேனும் மின்சாரம், காந்தம் ஆகியவைகளும் அவை போன்றவைகளே.

நம்முடைய தினசரி வாழ்க்கையில் நம்முடைய குடும்பத்தில் காணும் அன்பும் வாஞ்சையும் அந்த மாதிரி சக்தியின் உருவங்களே. இந்த அன்புதான் மக்களை மக்களோடு பிணைத்து வைக்கின்றது. அது போலவே வெறுப்பும் ஒருவித சக்தியே. குதிரை, வண்டியை இந்தப் பக்கமும் இழுக்கும், அந்தப் பக்கமும் இழுக்கும். அதுபோல அன்பு ஒரு பக்கம் இழுக்கிறது. வெறுப்பு ஒரு பக்கம் இழுக்கிறது. அன்பால் பிணைக்கப்பட்டவர்களிடையே கசப்பு ஏற்பட்டால், அன்பால் பிணைக்கப்படாதவர்களைவிட அதிகமாக ஒருவரையொருவர் வெறுக்கிறார்கள். துஷ்டத்தனமுள்ள குதிரை, வண்டியை வேகமாக இழுத்துச் செல்வது போலவே, வண்டியை உதைத்

துத் தள்ளவும் செய்யும். அந்த மாதிரிச் செய்யாது எருமை நீங்கள் குதிரையை ஓட்டிப் பழக்கப்பட்டிருந்தால் நல்ல வார்த்தைகளால்தான் நல்ல குதிரையாகச் செய்ய முடியும் என்பதை அறிந்திருப்பீர்கள் சில சமயங்களில் பயமுறுத்தி வேகமாக ஓடும்படியாகச் செய்துவிடலாம். ஆனால் அது சிறிது நாட்களுக்குத்தான் குதிரையோ, மாடோ வைத்துப் பழக்க மானவர்களிடம் கேட்டுப் பாருங்கள் அன்பு ஒன்றினால்தான் அவைகளை அடக்கலாம் என்று கூறுவார்கள். பலாத்காரத்தை உபயோகித்தால் பலன் ஏற்படாது அந்த போலத்தான் மனைவி, மக்கள் விஷயமும் நம் மனதில் நல்ல எண்ணங்கள் இருந் தால் பிறர் மனத்திலும் நல்ல எண்ணங்கள் உற்பத்தியாகும் அது எப்படி என்பதை நாம் அறிந்துகொள்ள முடியாமலிருக்க லாம் ஆயினும் அன்பும், வெறுப்பும் மின்சார சக்தி போலவே வேலை செய்கின்றன.

உலகில் காணப்படும் அரசியல் உள்பட சகல பிரச்னை களும் மக்களை நம் விருப்பம்போல் நடக்கும்படி செய்வதற் கான விஷயமேயன்றி வேறொன்று இல்லை. பிறரை நம் விருப்பம்போல நடக்கும்படி செய்வதற்கு நாம் அன்புச் சக்தியை உபயோகிப்பதா அல்லது வெறுப்பையும் பயத்தையும் உபயோகிப்பதா? அதுதான் சத்தியாக்கிரகத்தின் தனிப்பெரும் கேள்வி. ஒரு காலத்தில் ஒரு மனிதன் கண்ணாடித் தடியைப் பட்டுத் துணியால் தேய்த்தால் அந்தக் கண்ணாடித்தடி சிறு காகிதத் துண்டுகளைத் தன்னிடம் இழுத்துக் கொள்கிறது என்பதைக் கண்டான். இப்படிக் கண்ட சக்தி, சிறு சிறு காகிதத் துண்டுகளை மட்டும் இழுக்கக் கூடியதாகத் தோன்றிய போதிலும், அதுவே மலைகளைப் பொடியாக்கவும், ரயில் வண்டி களை இழுக்கவும், நகரங்களுக்கு விளக்கேற்றவும் கூடிய பெரிய சக்தி என்று பின்னர் கண்டார்கள். அதுபோலவே அன்புச் சக்தியையும் பயன்படுத்தலாம். கணவனும் மனைவி யும் சண்டை போட்டால் அந்தச் சக்தி அதை நிறுத்திவிடும்.

மக்களை நம் விருப்பம்போல நடக்கும்படி செய்ய முடியும். இந்தச் சக்தியை அரசியலிலும் பயன்படுத்தலாம். அதுதான் சத்தியாக்கிரகம் என்பது. அது ஆரம்பத்தில் பலமில்லாதது போல தோன்றும். ஆனால் அது மின்சாரம் போல அதிக பலம் பொருந்தியதாகும். அதேபோல பலன்கள் காட்டக் கூடியதாகும்.

முற்காலத்தில் பாடசாலைகளில் மாணவர்களிடம் கோபச் சொற்களும், பிரம்பும் உபயோகித்தார்கள். அப்படி உபயோகிக்காத பாடசாலை பிரயோசனமில்லை என்றுகூடப் பிள்ளைகளின் பெற்றோர்கள் எண்ணினார்கள். ஆனால் இந்தக் காலத்தில் அன்பு, மகிழ்ச்சி, சிரிப்பு ஆகிய ஆயுதங்களையே உபயோகிக்கிறார்கள். பிள்ளைகளை அடிக்கும் ஆசிரியரை வேலையை விட்டு நீக்கி வருகிறார்கள். அது போலவே அரசியலில் இந்தக் காலத்தில் வேறுபட்டு முறை கையாளப்பட்டு வருகிறது. புது முறை வரும் காலமும் உண்டு. கல்வித் துறையில் பழைய ஆசிரியர் மறைந்து, புதிய ஆசிரியர் தோன்றி யிருப்பது போலவே, அன்பு முறை தோன்றும். பலாத்கார முறையைவிட அன்பு பலன் தருவதுமாகும் என்பதை அப்பொழுது அறிந்து கொள்வோம்.

உண்மையானது வெவ்வேறு விஷயங்களுக்கு வெவ்வேறு விதமாக இருக்கும் என்று எண்ண வேண்டாம். அது அணுவிலும், சூரியனிலும் ஒரே மாதிரிதான். "தீமையை எதிர்க்காதே" என்பது கிறிஸ்தவ வேத நூலில் உள்ள ஒரு வாக்கியம். அதுதான் டால்ஸ்டாய் உள்பட சகல சத்தியாக்கிரகிகளுக்கும் மூல மந்திரமாகும். சத்தியாக்கிரகம் என்பதைப் புதிதாக மகாத்மாஜி சிருஷ்டித்தார் என்றோ, அல்லது டால்ஸ்டாய் சிருஷ்டித்தார் என்றோ எண்ண வேண்டாம். கிறிஸ்துவும், புத்தரும் கூறியபொழுதுகூட அவர்களால் கண்டு பிடிக்கப்பட்ட புதியதோர் உண்மை என்று கருத

வேண்டார்? உலகத்தில் ஆதியில் எழுதப்பட்ட நூல்களி
லேயே அது காணப்படுகிறது. உலகத்தில் மிகப் பழைய
நூல் வேதம்தான் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்
கள். ஆகவே புத்தர், கிறிஸ்து, டால்ஸ்டாய், காந்தியடிகள்
ஆகியோர் மூலம் வந்த இந்த உண்மை மிக மிகப் பழைய
தாகும். கிறிஸ்துவும், டால்ஸ்டாயும் கூறுவதற்கும்
மகாத்மாஜி கூறுவதற்கும் வேறுபாடு உண்டு என்று சிலர்
எண்ணுகிறார்கள். மகாத்மாஜி தீமையை எதிர்க்கும்படி
கூறுகிறார் அல்லவா? என்று கேட்கிறார்கள். ஆனால் உண்
மையில் யாதொரு வேறுபாடும் கிடையாது. "எதிர்த்தல்"
என்னும் மொழியின் பொருளை நாம் நன்கு அறிந்து கொள்ள
வேண்டும். அப்படி அறிந்து கொண்டால் அப்பொழுது வேறு
பாடு மறைந்து போகும். "தீமையை எதிர்க்காதே" என்று
சொல்லும் பொழுது அதன் பொருள் "தீமை செய்தவனுக்குத்
தீமை செய்யாதே, வெறுப்புக் காட்டியவனுக்கு வெறுப்புக்
காட்டாதே" என்பதாகும். பொருளை உணர்ந்தால் கிறிஸ்து
வின் போதனைக்கும், மகாத்மாஜியின் போதனைக்கும் வேறு
பாடு இல்லை என்பதை அறிந்துகொள்ளலாம். தீமை செய்த
வர்க்கு நன்மை செய்வது, தீமையை எதிர்ப்பதேயாகும் என்ப
தில் சந்தேகமில்லை. ஆனால் தீமையை எதிர்க்காதே என்று
சொல்லும்போது, அத்தகைய எதிர்ப்பைக் குறிப்பிடவில்லை.
தீமையால் எதிர்க்காமல், தீமையை நன்மையால் எதிர்க்க
வேண்டும் என்பதே அதன் பொருள். ஒரு பையனைக்
கூப்பிட்டால் என்ன என்று கேளாமல் இருந்தால், அப்
பொழுது அவனை அடிக்க வேண்டாம், அவனிடம் அன்பு
காட்டுங்கள். அதுபோலவே காந்தியடிகள் தீமை செய்த
வர்க்கு நன்மை செய்யுங்கள் என்று சொன்னாலும் நகைப்
பார்கள். தீமைக்குப் பதிலாக நன்மை செய்தால் அவருடைய
மனம் உடனே மாறிவிடும். அப்படிச் செய்யாமல் தீமைக்குத்
தீமையே செய்தோமானால், அவருடைய மனம் இரண்டு மடங்கு

தீமையாகவே ஆகிவிடும். நல்ல எண்ணங்கள், நல்ல மொழிகள், நல்ல செயல்கள் இவற்றிலுள்ள சக்தி அளவற்றதாகும். அதையே நாம் பயன்படுத்த வேண்டும்.

இந்தியாவில் நாம் செய்து வரும் சத்தியாக்கிரச் சோதனையானது, நம்முடைய சுதந்திரத்தைத் தேடுவதற்காக மட்டுமே செய்யும் சோதனை என்று எண்ண வேண்டாம். இந்தியா சுதந்திரம் பெறுவது உலக முன்னேற்றத்துக்கு அவசியமாயிருந்தால், நம்முடைய சத்தியாக்கிரகச் சோதனையைக் கடவுள் ஆசீர்வதிக்கமாட்டாரா? அதுதான் அதற்கு உயிரும் முக்கியத்துவமும் அளிப்பதாகும். நம்முடைய துர் அதிர்ஷ்டங்கள் அல்ல, நம்முடைய துன்பங்கள்தான் இந்தப் புதிய போர் முறையை வகுக்கும்படி செய்திருக்கிறது. தீமை எவ்வளவுக்கெவ்வளவு அதிகமோ அவ்வளவுக்கவ்வளவு நமது சோதனையும் பெரிதாகும். அது போலவே நம்முடைய புகழும் அதிகமாக உலகத்தில் பரவும். ஆதலால் நாம் நம்முடைய போரைச் சரியான விதத்தில் நடத்திக் கொண்டு போக வேண்டும்.

பாடசாலையின் தலைமை ஆசிரியர் வெளியே போனதும் வந்த புது ஆசிரியர் பிரம்பை மேஜையிலிருந்து எடுத்து உபயோகித்து மாதக்கணக்காகத் தலைமை ஆசிரியர் செய்த நல்ல காரியத்தை அரை நொடியில் அழித்துவிடுவது போலவே ஆகிவிடும். நாம் அஹிம்சா நெறியினின்று அணுவளவேனும் பிறழ்ந்து நடந்தோமானால், அதற்கு எத்தனையோ சாக்குப் போக்குகளை நாம் கூறலாம். ஆனால் மகாத்மாஜி கூறுவது யாதெனில், நாம் விரைவில் பயன் காணாதிருப்பதற்குக் காரணம் நாம் அப்பழுக்கில்லாமல் அஹிம்சா தர்மத்தை அனுஷ்டிக்கத் தவறுவதே என்பதாகும். ஆங்கிலேயரோ ஐரோப்பியரோ மகாத்மாஜியுடன் பேசிக் கொண்டிருந்து விட்டு விடை பெற்றுக் கொள்ளும்பொழுது, "ஆகா இவரைப்

போலவே இந்தியர் எல்லோரும் ஆகிவிடுவார்களானல் இத்த அரசியல் பிரச்னையை எளிதில தீரதது விடலாம" எனறு எண்ணிக் கொளகிருர்கள சகல ஜனஙகளும அவரைப் போல் நடக்க முடியவிலலை எனபது உணமைதான ஆயி னும் மக்கள மனததிலிருநது வெறுபபு உணாச்சியை வேருடன கலலி எறிவதே நமது நோககமாக இருகக வேண்டும இநத முயற்சியில ஒவ்வொருவரும இபபொழுதே ஈடுபட வேண்டும.

மரங்களும் செடிகளும்

நாம் சுவாசிப்பது போலவே மரங்களும் செடிகளும் சுவாசிக்கின்றன. உலகத்தில் மக்களைவிட மரங்களே அதிகமாகக் காணப்படுகின்றன. இந்த உலகத்தில் மரங்களின் ராஜ்ஜியமே எல்லாவற்றிலும் பெரிய ராஜ்ஜியம். ஆதலால் மரங்களையும் செடிகளையும் பார்க்கும்பொழுது நாம் "மெஜாரிட்டி" முன்னால் இருப்பதாக உணர்தல் வேண்டும். ஆகவே மக்களினமானது தாவர இனத்தைப் போல முக்கியமானதன்று என்று தெரியவரும். ஜனநாயகத்தை நிறுவி வாக்கு எடுப்பதாயிருந்தால் மரங்கள்தான் வெற்றிபெறும். இந்தியாவை அரசாள ஜனநாயகத்தை அமைத்தால் தாவரங்களே அரசர்கள் ஆகிவிடும்.

மனிதன் நீரில் மூழ்கினாலும் சரி, அல்லது வாயையும், மூக்கையும் இறுக மூடிவிட்டாலும் சரி இறந்து போவான். அதேபோலத்தான் மரங்களும் பூமியில் வேர் இறங்கி யிருந்தாலும், அறவே காற்றில்லாமல் தடுத்து விட்டால் பட்டுப் போகும். ஆயினும் ஒரு வேறுபாடு உண்டு. நாம் வெளியே சுவாசிக்கும் காற்றை கெட்ட காற்று என்றும், நாம் உள்ளே சுவாசிக்கும் காற்றை நல்ல காற்று என்றும் கூறுகிறோம். ஆனால் நமக்குக் கெட்ட காற்றாக இருப்பது தாவரங்களுக்கு

நல்ல காற்றுக்கும் நாம் எதை உண்டு உடம்பை வளர்க்கிறோமோ அதை நாம் உடம்பில் எரிக்கவே செய்கிறோம். ஆம், நாம் அனைவரும் நம்முடைய தசையை எரிக்கவே செய்கிறோம். நாம் சுவாசிக்கும் காற்றே நம்முடைய தசையை எரிக்கின்றது. அதனாலுண்டாகும் புகையே நாம் வெளியே விடும் காற்று. அந்தக் கழிவுக் காற்றை மரங்கள் சுவாசித்து, அதிலுள்ள கரியைப் பிரித்து, அதை தம்முடைய உடம்பில் சேகரித்து வைத்துக் கொள்கின்றன. அதையே தான் நாம் மறுபடியும் நம்முடைய உணவாக உபயோகித்துக் கொள்கிறோம். நாம் உண்பதின் ஒரு பகுதியையே சீரணிக்கிறோம். எஞ்சியதை வெளியே கழித்து விடுகிறோம். அந்தக் கழிவு பூமியில் சேர்கின்றது. பூமி அதை உறிஞ்சிக் கொள்கிறது. அதன்பின் தாவரங்களின் வேர்கள் அதைக் கிரகித்து அதைப் பயன்படுத்தி நமக்கு வாழை, தக்காளி, மா, முதலிய பல நல்ல உணவுகளை அளிக்கின்றன.

தாவரங்களுக்கும் மரங்களுக்குமுள்ள தொடர்பு, தாய்க்கும் குழந்தைக்குமுள்ள தொடர்பு போன்றதாகும். நாம் கெட்டதென்று எதை எறிந்து விடுகிறோமோ, அதைத் தாவரங்கள் தாயைப் போல நல்ல பொருள்களாகச் செய்து நமக்குத் திருப்பி அளித்து விடுகின்றன. ஆதலால் உலகத்தின் வாழ்வில் தாவரங்கள் எத்தகைய முக்கியமான ஸ்தானத்தை வகிக்கின்றன என்பதை அறிந்து கொள்ளலாம்.

நமக்கு சுவாசிப்பதற்காக வாயும், மூக்கும், சுவாசப் பைகளும் உள. ஆனால் மரங்களுக்கும் அவைகள் உளவோ? அவைகளிடம் அழகான இலைகள் காணப்படுகின்றன. அவை தாம் அவைகளுடைய மூக்கும் சுவாசப் பைகளுமாகும். மரத்தைக் கவனித்துப் பாருங்கள். காற்றையும், ஒளியையும் போதுமான அளவு பெறுவதற்காக, அதன் இலைகள் சகல பக்கங்களிலும் பரந்திருப்பதைக் காணலாம். சூரிய ஒளியைப் பெறுவதற்காகத்தான் மரங்கள் அதிவிரைவாக உயர்ந்து வளர்கின்றன.

மரத்தடியில் ஒரு கொடியை நட்டால், அது மரத்தைச் சுற்றி ஏறி, சூரிய ஒளியைப் பருக முயலுவதைக் காணலாம். காட்டிலோ, தோட்டத்திலோ உள்ள மரங்களில், எந்த மரங்கள் நிழலில் நிற்கின்றனவோ, அந்த மரங்கள் எல்லாம் நன்றாக வளராமல் சூரிய ஒளியைப் பெறுவதற்காக அந்தப் பக்கமும், இந்தப் பக்கமுமாக வளைந்து வளைந்து வளர்வதையும் காணலாம். தாவரங்களின் பிரதான உணவு சூரிய ஒளியாகும்.

நம்மைப் போலவே அவைகளும் உயிருள்ளவை. ஆனால் நாம் இறந்தபின் நம்முடைய உடல்கள் பயன்படாது. அவைகளுடைய உடல்களோ இறந்த பின்பும் பயன்படுவன. மனிதனுடைய வாழ்க்கை முறையோடு தாவரங்களின் சுகாதார வாழ்க்கை முறையை ஒப்பிட்டுப் பார்த்தால் அதன் அழகு விளங்கும். மனிதன் அங்குமிங்கும் அலைந்து, கெட்ட பழக்கங்களையும் நோய்களையும் தேடிக் கொண்டு அசங்கியமான விதத்தில் இறந்து போகிறான். ஆனால் மரங்களோ அலையாமல் நின்று நிற்கின்றன. அவைகள் தவறான உணவை உண்பதில்லை. சுத்தமாக வாழ்கின்றன. அவற்றின் உடல்கள் இறந்த பின்பும் உபயோகமாகின்றன. சில மரங்களின் கட்டை உலோகத்தைப் போலவே பயன் தருவதாயிருக்கிறது. இன்று இந்தியாவில் பெரும் கீர்த்தி பெற்றுள்ள பெரியார்களில் ஒருவர், மனிதனுக்கு இருப்பது போலவே மரங்களுக்கும் நரம்புகள் இருக்கின்றன என்றும், அதனால் அவை மனிதனைப் போலவே நோவை உணர்ந்து கொள்கின்றன என்றும் கண்டு பிடித்திருக்கிறார். மனித உடலில் இரத்தம் ஓடுவது போலவே மரத்தின் உடலிலும் இரத்தம் ஓடுகின்றது. மரத்தை வெட்டினால் ரத்தம் வடிவதைக் காணலாம். எதற்காகவேனும் ஒரு மரத்தின் பாகத்தை வெட்டி எடுக்க வேண்டியேற்பட்டால், அப்படி வெட்டுவதால் உண்டாகும் காயம் எளிதில் ஆறும்படியாக நாம் வெட்ட வேண்டும். தவறாக வெட்டினால் அது அதிகமாகத் துன்பமுறும், அது நமக்குப் புலனாகாமலிருக்கலாம். அதனால் கிளையொன்றை வெட்ட

வேண்டுமானுல் அறுவை வைத்தியர் வெட்டுவது போல் கவன மாக வெட்டவேண்டும். கூர்மையான கத்தியைக் கொண்டு ஒரே வெட்டாக வெட்டினுல் காயம் விரைவில ஆறிவிடும். அப்படிச் செய்யாமல் கையைக் கொண்டு முறித்தால பெரிய காயமாகி விடும். எளிதில் ஆருது. நம்முடைய உடம்பில் ஏதேனும் ஒரு கட்டி ஏற்பட்டால அதை நாம விரலைக கொண்டு கீறுவதில்லை. கூர்மையான கத்தியைக் கொண்டே வைத்தியா கீறுவார். அது போலவே நாம மரககிளையை வெட்டவோ, அல்லது பழமோ மலரோ பறிககவோ விரும்பிஞல நாம அதையும கவனமாகவே செய்ய வேண்டும்

மரத்தின கீழிருந்து மேலே சாறு பட்டையின மூலமாகவே ஏறுகின்றது. அதனுல பசுமையான பட்டைதான மரத்தின ஜீவாதாரமான பாகமாகும அதனுல அதை கவனமில்லாமல நினைத்தபடி வெட்டலாகாது. காட்டில மரங்கள வெட்டுகிறவா கள், முதலில அவற்றின வேப்ப பக்கத்தில மரத்தைச சுற்றி பட்டையைச் சீவிவிடுவார்கள அப்பொழுது இரத்த ஓட்டம நின்றுபோய், மரம சிறிது காலத்தில பட்டுப போகும.

மரங்கள மண முறைகளையும கையாளகின்றன தவிர உலகத்தில இரண்டு விதமான மலாகளைக காணகிறோம. ஒன்று ஆண்மலர், மற்றது பெணமலா பழம உண்டாக வேண்டு மானுல இரண்டு மலர்களும ஒன்று சேரவேண்டும வசந்த மலர்கள புன்னகை பூப்பதும, மணம கமழ்வதும நமக்காக என்று எண்ணவேண்டாம. அதுதான் அவற்றின் மணச சடங்கு குடும்ப விழா மலாகளிலுள்ள ஆண்தாதும் பெண் தாதும எப்படிச சேருகின்றன என்று தெரியுமா' அது இதைவிட அதிக வியப்பான விஷயமாகும.

மலர்களில் மொய்க்கின்ற அழகான பூச்சிகளும், வண்டு களும், எறும்புகளும தான் பூத்தாதுக்களை ஒரு மலரிலிருந்து மற் ருெரு மலருக்குக கொண்டு போய்ச் சேர்கின்றன அதன்

காரணமாகவே பழங்களும் விதைகளும் உண்டாகின்றன. இந்தப் பூச்சிகளை எல்லாம் மலர்களின் விரோதிகள் என்று எண்ணலாகாது. அவைகள்தான் செடிகளின் திருமணத்தை முடித்து வைக்கும் புரோகிதர்கள். அப்படித் திருமணத்தை நடத்தி வைப்பதற்காக மலர்கள் தேனை வைத்துக் கொண்டு அந்தப் புரோகிதர்களை அழைக்கின்றன. அவர்கள் தேனைக் குடிப்பதற்காகச் செல்லும் பொழுது ஆண்தாது அவற்றின் உடலில் ஒட்டிக்கொள்கிறது. பிறகு அவை அதைப் பிற மலர்களுக்குக் கொண்டு போய்ச் சேர்க்கின்றன. ஆதலால் தேனைப் புரோகிதர்களுக்கு கொடுக்கும் தட்சணையாகவோ, அல்லது இந்தக் காலத்தில் பலகலை பட்டம் பெற்ற இளைஞர்கள் வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்கும் ஸ்ரீதனமாகவோ பாவிக்கலாம். ஆனால் ஒரு வேறுபாடு, நாம் கொடுக்கும் தட்சணையோ அசுத்தமான நாணயங்கள். மலர்கள் கொடுக்கும் தட்சணையோ அமுதம்போன்ற தேனாகும். ஆகவே நாம் இழிவாகக் கருதும் அந்தச் சின்னஞ் சிறிய பூச்சிகள் தான் மரங்களில் பழங்களையும், விதைகளையும் உண்டாகும்படி செய்து நமக்கு உணவளிக்கும் அன்னதாதாக்கள். நாம் உண்ணும் ஒவ்வொரு பருக்கையும் மலர்களில் நடைபெறும் திருமணத்தின் பயனேயாகும்.

ஆதலால் எந்த மரத்தைப் பார்த்தாலும் நாம் அதை நம்முடைய அன்னையாகவே எண்ணவேண்டும். ஏதேனும் மலரைப் பறிக்கவேண்டியிருந்தால் அறுவை வைத்தியரை நினைவில் வைத்துக்கொண்டு அதைக் கஷ்டம் கொடாமல் கவனமாகப் பறிக்கவேண்டும். மலர்களினின்றும் ஏதேனும் சிறிய பூச்சி ஒன்று வெளியே வந்தால், அதை நாம் நம்முடைய சிறிய பாட்டியாக எண்ணிக்கொள்ள வேண்டும்.

ஆண் மலர்களும், பெண் மலர்களும் வேறு வேறு மரங்களில் உண்டாகின்றனவா? அல்லது ஒரே மரத்தில் உண்டா

கின்றனவா? என்று கேட்பீர்கள், சொல்லுகிறேன். பெரும்பான்மையான மரங்களில் ஆண் மலர்களும், பெண் மலர்களும் இரண்டும் உண்டு. ஆனால் சில மரங்களில் ஆண் மலர்கள் மட்டுமே பூக்கும். சில மரங்களில் பெண்மலர்கள் மட்டுமே பூக்கும். மரத்தைத் தனி உயிராக எண்ணலாகாது அதை ஒரு குடும்பமாகவோ, அல்லது சமூகமாகவோதான் எண்ண வேண்டும். அதில் பல உயிர்கள் வாழ்கின்றன. அவைகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று சேர்ந்து அழகாக வாழ்ந்து வருகின்றன நம்முடைய உடம்பும் அதுபோலவேதான் கையோ, காலோ, மூளை சொன்னபடி கேட்காவிட்டால், உடனே உடம்பில் அந்த பாகங்கள் வேலை செய்ய முடியாமல் ஆகிவிடும். ஆங்கிலேயன் ஒருவனை அடித்துவிட்டால் அவன் நோவடைவதுபோலவே, அந்தச் சமூகம் முழுவதும் நோவடையும். அந்தச் சமூகம் மரத்தைப்போல ஒரே உயிராக வாழ்வதுதான் அதற்குக் காரணம். ஆனால் நம்முடைய இந்திய சமூகத்திலோ ஒருவன் அடிபட்டால் நாம் எல்லோரும் அதை நமக்குப் பட்ட அடியாக உணர்வதில்லை. அதனால்தான் நாம் இந்தக் கீழான நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறோம். இத்தகைய ஒற்றுமையை நாம் மறுபடியும் உண்டாக்க வேண்டும். நம்முடைய குடும்பங்களில் அத்தகைய ஒற்றுமையைக் காண்கிறோம். அந்த ஒற்றுமையைச் சமூகத்திலும் உண்டாகும்படி செய்தால் என்ன? இந்திய சமூகம் முழுவதையும் ஒரே குடும்பமாக எண்ணி அதுபோல வாழ்ந்தால் என்ன? நம்மிடமுள்ள சக்திகளையெல்லாம் சமூகத்துக்காகப் பயன்படுத்தவேண்டும். அதனால் தேசம் க்ஷேமமடையும். அப்பொழுது தாய்க்கும் சகோதரனுக்கும் குடும்ப க்ஷேமத்தைக் கண்டு ஆனந்தம் உண்டாகும். அதுதான் தேசபக்தி என்பதன் பொருளாகும்.

பெட்டைக்கோழி குஞ்சுகளைப் பெறுவது எப்படி? முதலில் முட்டைகளை இடுகின்றது. அதன் மேற்புறத்தில் ஒரு ஓடு, அதற்கடுத்ததாக ஒரு மெல்லிய தோல். அதனுள் இரண்டு

கட்டியான திரவங்கள், ஒரு திரவம் வெண்மையாகவும், மற்றது மஞ்சளாகவும் இருக்கும். அந்த மஞ்சள் பாகம் குஞ்சாக மாறும்பொழுது அதற்கு உணவாகப் பயன்படுவது வெள்ளைத் திரவம்.

மக்களிடமும் முட்டைகள் உண்டாகின்றன. ஆனால் அவை வெளியே இடப்படுவதில்லை. அன்னையின் வயிற்றிலுள்ளேயே நீண்ட காலம் தங்குகின்றன. முட்டையிலுள்ள மஞ்சள் பாகம் குஞ்சாக மாறி ஓட்டை உடைத்துக் கொண்டு வெளியே வரும்வரைக்கும் அதற்கு வெள்ளைக் கரு எவ்வாறு உணவு கொடுத்துக் கொண்டிருக்கிறதோ, அதுபோல மனிதக் குழந்தை தாயின் வயிற்றில் உண்டாகிக் கொண்டிருக்கும் போது, அதற்கு உணவு எங்கிருந்து கிடைக்கிறது? அதை ஊட்டுபவர் யார்? குழந்தைக்கு வேண்டிய இரத்தமெல்லாம் குழந்தையின் கொப்பூழ்க்கொடி வழியாகத் தாயின் உடலிலிருந்து செல்கிறது. மலரில் காம்பும் இதழ்களும் உள. மலருக்கும் மலரில் உண்டாகும் பழத்துக்கும் உணவானது காம்பு வழியாக வந்து சேர்கின்றது. காம்புதான் அந்தத் தாவரக் குழந்தை உண்டாகும் காலத்தில் உணவு போகும் வழியாகவுள்ள கொப்பூழ்க்கொடி. ஆகவே தாயை ஒரு மரம் போலவும் குழந்தையைக் காம்பு மூலம் உணவு பெற்று மலரில் வளரும் பழமாகவும் பாவிக்கலாம். பழமானது பறிக்கும் பருவத்தை அடைந்தும், காம்பு உலர்ந்துபோகின்றது. அதுபோலவே குழந்தை தாயின் வயிற்றிலிருந்து வெளியே வரக்கூடிய பருவத்தை அடைந்ததும் அதன் கொப்பூழ்க்கொடியும் பிரிந்து விடுகின்றது. இரண்டுக்கும் அதிக வேறுபாடு இல்லை.

தென்னை மரத்தைப் பாருங்கள், தேங்காய்கள் அதன் உச்சியில் காய்க்கின்றன. அவ்வளவு உயரத்திலிருந்து விழுந்தாலும் அவை சேதமடைவதில்லை. ஏன் தெரியுமா?

அதன்மீது பருத்த மூடியிருப்பதுதான் காரணம் தேங்கா யைக் கவனித்தால் அதன் கோப்புழ எது என்று தெரிந்து கொள்ளலாம். மரத்தில் தொங்குவதற்குப் பயன்படும் காம்புதான் அதன் கொப்பூழ்க் கொடி குழந்தை பிறந்த பின் தாயினின்றும் பிரிந்து தனி உயிராக வாழ்வதுபோலவே, தேங்காயும் மரத்தினின்றும் விழுந்தபின் தனித்து வாழ முடியும். தேங்காயையும் ஒரு முட்டையாகப் பாவிக்கலாம். அதனுள் அது செடியாக வளர்வதற்கு வேண்டிய உயிர்ச் சத்தும், உணவும் உள தென்னங்கன்று தேங்காயினுள் வளர்ந்து வரும் வரைக்கும் அதிலுள்ள பருப்பும், நீருமே உணவாகப் பயன்படுகின்றன பருப்பும், நீரும் நமக்காக ஏற்பட்டவை என்று எண்ணலாகாது. கன்று உண்டாக வும், நிலத்தில் வேரூன்றவும் கூடிய பருவமடையும் வரைக்கும் உணவாகப் பயன்படவே அவை தேங்காயி னுள் வைக்கப்பட்டிருக்கின்றன இதுதான் தென்னை மரத்திலுண்டாகும் முட்டையின் சரிதையாகும் இது போலவேதான் நெல்லும் அதிலும் உமியினுள்ளேயே அரிசிக் குழந்தை யிருக்கிறது அந்தக் குழந்தைக்கு நிலத்தில் வாழத்தெரியும் வரைக்கும் அதனுள்ளேயே உணவு சேகரித்து வைக்கப்பட்டிருக்கிறது அரிசி எல்லாம் நமக் காகவே சிருஷ்டிக்கப் பட்டிருப்பதாக நாம் எண்ணிக் கொள்கிறோம், அது தவறு அதனுள் வைக்கப்பட்டிருக் கும் உயிர்க்கு உணவாகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன.

நட்சத்திரமும் அணுவும்

★

நாம் இரவில் வானத்தில் பார்க்கும் நட்சத்திரங்கள் எல்லாம் நம்முடைய பூமியைப் போன்ற உலகங்களே யாகும். அவைகளில் சில நம்முடைய பூமியைவிடப் பல கோடி மடங்கு பெரியன. வானத்தில் சில இடங்களில் மங்கலாகத் தோன்றும் வெண் மேகங்கள் பல்லாயிரக் கணக்கான உலகங்களின் கூட்டமேயாகும். தூரம், பருமன் ஓட்டம் ஆகியவற்றை ஆராய்ந்தால் அண்டத்தில் காண்பவை எல்லாம் அச்சமும் ஆச்சரியமும் ஒருங்கே தரக்கூடியனவாக இருப்பதை அறியலாம். இத்தகைய ஆராய்ச்சியில் நம்முடைய கற்பனு சக்தியைப் பயன்படுத்துவது நல்லது. அப்படிச் செய்தால் நம்மிடம் செருக்குக் குறைந்து பணிவு உண்டாகும்; அன்புணர்ச்சி தோன்றும். துக்கத்தையும், துன்பத்தையும் சகித்துக் கொள்வதற்கு வேண்டிய பலம் உண்டாகும். துக்கத்தையே இன்பமாக மாற்றக் கூடிய சக்தியும் பிறக்கும்.

நான் பேசுகிறேன். என் வாயில் உண்டாகும் ஒலி உங்கள் காதுக்கு எட்டுகிறது. அது வெகு விரைவாய்ப் பிரயாணம் செய்கிறது. ஆயினும் அது பிரயாணம் செய்யக் காலம் செல்லவே செய்கிறது; சிறிது தூரத்திலுள்ள

ஆற்றிலோ, குளத்திலோ ஒருவர் துணி துவைக்கும் பொழுது பாறைத்திருப்பிகள் கல்லில் துணி படுவதைக் கண்ட சிறிது நேரம் கழிந்தே அதனால் உண்டான சப்தம் கேட்கும். அந்த நேரம்தான் சப்தம் கல்லிலிருந்து புறப் பட்டுக் காதுக்கு வந்து சேர்வதற்காக வேண்டியிருந்த நேர மாகும்.

இடியையும் மின்னலையும் கவனித்தீர்களா? மின்னல் வெட்டுகிறது சிறிது நேரம் கழிந்த பிறகே இடி முழக்கம் கேட்கிறது. ஆனால் இரண்டும் ஒரே சமயத்தில் தான் உண்டாகின்றன ஒளி சீக்கிரம் வந்து விடுகிறது, ஒலி வரத் தாமதமாகிறது வெகு விரைவாகச் செல்லும் ரயில் வண்டி நிமிஷத்துக்கு ஒரு மைல் வீதம் ஓடும். ஆனால் ஓசையோ அதைவிடப் பன்னிரண்டு மடங்கு அதிக வேக மாய ஓடும் அதாவது ஓசையின் வேகம் நிமிஷத்துக்கு 12 மைல் இதிலிருந்து சப்தம் எவ்வளவு வேகமாகச் செல் லுகிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்

மின்னலும் உண்டானவுடனேயே நடந்ததைத் தெரிந்து விடுவதாக எண்ணவேண்டாம் அதன் ஒளி பிரயாணம் செய்யவும் நேரம் தேவைப்படவே செய்கிறது ஆனால் அது பிரயாணம் செய்யும் நேரம் அதிக அற்பமாக இருக்கிறபடி யால் நாம் அதைப் பொருட்படுத்துவதில்லை. அவ்வளவு வேகமாய்ச் செல்லுகிறது அது. அதாவது ஓசையை விட ஒளி 10 லட்சம் மடங்கு அதிக வேகமான ஓட்டம் உடை யதாயிருக்கிறது

நட்சத்திரங்களுக்கிடையிலுள்ள தூரத்தை நாம் மைல் கணக்கில் அளந்து கூறமுடியாது பெரிய பணக்கா ரர்களுடைய சொத்தைக் கணக்கிடும்பொழுது நாம் இத் தனை பைசாவென்றோ, அல்லது இத்தனை ரூபாய் என்றோ கூறுவதில்லை. இத்தனை கோடி என்றே கூறுவார்கள்.

அதுபோல் நட்சத்திரங்களுக்கிடையில் உள்ள தூரத்தை இத்தனை மைல்கள் என்று கூறாமல், இந்தத் தூரத்தைக் கடக்கச் செல்வதற்கு ஆண்டுகள் இத்தனை என்றே கூறுவது வழக்கம்.

அதைச் சற்று யோசித்துப் பாருங்கள். இந்தியாவின் வடக்கேயிருந்து தெற்கேவரை எவ்வளவு தூரம், அதைப் போல நூறுமடங்கு தூரத்தைக் கடக்க ஒளிக்கு ஒரே செகண்டுதான் தேவை. அது ஓசையைவிட 10 லட்சம் மடங்கு அதிக வேகமாய்ச் செல்கிறது என்றும் ஓசை, வேகமான ரயிலைவிட 12 மடங்கு அதிக வேகமாய்ச் செல்கிறது என்றும் கூறினேன் அல்லவா? பூமிக்கும் சூரியனுக்குமிடையில் வெகு தூரம் என்பதை அறிவீர்கள். பூமி சூரியனைச் சுற்றிவரும் பாதையும் வெகு தூரம் என்பதை அறிவீர்கள். அந்தப் பாதை பூமிக்குள்ள தூரத்தைவிட 6-மடங்கு நீளமுடையது. அதாவது 5400-லட்ச மைல்கள். இவ்வளவு தூரத்தைக் கடக்கப் பூமிக்கு ஒரு வருஷம் தேவைப்படுகிறது. ஆனால் ஒளியோ, பூமி 38-வருஷகாலம் சுற்றிவரும் தூரத்தை ஒரே நாளில் கடந்துவிடும். அவ்வளவு வேகமாய்ச் செல்லும் ஒளிக்குக்கூட நமக்கு வெகு சமீபத்திலுள்ள நட்சத்திரத்திலிருந்து நம்முடைய பூமிக்கு வந்து சேர 3-வருஷங்கள் ஆகின்றன. இதிலிருந்து அந்த நட்சத்திரம் எவ்வளவு அதிக தூரத்திலிருக்கிறது என்பது தெரிகின்றதல்லவா? பக்கத்திலுள்ள நட்சத்திரம்தான் அவ்வளவு தூரம். அப்பாலுக்கு அப்பாலுள்ள நட்சத்திரங்களிலிருந்து ஒளியானது நமக்கு வந்துசேர ஆயிரம் ஆண்டுகள்கூட ஆகும்.

ஆதலால் இன்று புதிதாக ஒரு நட்சத்திரத்தைப் பார்த்தால் நாம் பார்ப்பது அதன் இயற்கைத் தோற்றமன்று. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் புத்தர் பிறப்பதற்கு முன்

புள்ள தோற்றமாகும். அன்று புறப்பட்ட ஒளி இன்றுதான் நம்முடைய கண்களுக்கு வந்து சேர்ந்திருக்கிறது. அதற்கிடையில் எத்தனையோ காரியங்கள் இந்தியா தேசத்தில் நடந்து விட்டன. ஆகவே அது வெகு விரைவாகச் செல்லும் ரயில் வண்டியைவிட 120 லட்சம் மடங்கு அதிக வேகமாக ஓடிவந்து, இப்போதுதான் நம்மிடம் வந்து எட்டியிருக்கிறது. அதைச் சிறிது யோசித்துப் பாருங்கள்.

ஆகவே நாம் வசிக்கும் இந்த உலகமும், அதில் வாழும் நம்முடைய சிற்றுயிர்களும் எத்தனை அற்பமானவை? எலியைப் பிடிக்கப் பொறி வைக்கிறோம். அதனுள் பல எலிகள் சேர்ந்து அகப்பட்டுக் கொள்கின்றன. அங்குள்ள வெங்காயத்தைத் தின்னவும் விளையாடவும் செய்கின்றன. அவற்றுள் சில மகிழ்கின்றன, சில வருந்துகின்றன. இதுபோலத்தான் நாமும் நம்முடைய பூமியும்.

இவ்வாறு புறத்தேயுள்ள அண்டமானது இத்தனைப் பெரியதாக இருப்பது போலவே, அகத்தேயுள்ள பிண்டமும் அத்தனைப் பெரியதாகவே காணப்படுகிறது. அதுபோலவே ஒவ்வொரு அணுவும் ஒரு அண்டமாகவே இருந்து வருகிறது. அதனுள் மூலக்கூறுகளும், அணுக்களும் எலக்டிரான்களும் ஒளியைப்போல வேகமாகவும் நட்சத்திரங்களைப் போலவும், கிரகங்களைப் போலவும் அதிக ஒழுங்காகவும் ஒன்றைச் சுற்றி ஒன்று சுழன்று வருகின்றன. புறத்தே வானத்தில் சுழலும் நட்சத்திரங்கள் எவ்வளவு அதிக வேகமுடையனவாய் இருக்கின்றனவோ அதுபோலவே அகத்தே அணுவிலுள்ள சக்தி வேகமுடையனவாய் இருக்கின்றன. இப்படி உள்ளும் புறமும் அதி அற்புதமாக நிகழ்ந்து வரும் இந்த அண்ட சராசரங்களெல்லாம் ஒரு தனிப் பெரும் சக்தியின் தோற்றங்களேயாகும். அதைத்தான் நமது முன்னோர்கள் தமது காயத்திரி மந்திரத்தில் கீழ்கண்டவாறு போற்றி வணங்கினார்கள்.

"அளவிட்டு அறிய முடியாத இந்த உலகங்களை எல்லாம் இடை விடாமல் ஆக்கியும் அசைத்தும், அழித்தும் வருகின்ற அந்தப் பரஞ்சோதியை நான் வணங்குகிறேன். அது என் அகத்தே நிறைந்து என்னை தூய்மையாக்குமாக"

நீங்கள் என்னைச் சுற்றி இந்த பூமியில் பத்திரமாக உட்கார்ந்திருப்பதாக எண்ணுகிறீர்கள் ஆனால் நம் கற்பனைக்கு எட்டாததும் தலை சுற்றும்படியானதுமான அதிக வேகத்தோடு நாம் சென்று கொண்டிருக்கிறோம் என்பதை நீங்கள் உணரவேண்டும். காலால் நடப்பதைவிட எத்தனை மடங்கு அதிக வேகமாக ரயில்வண்டி ஓடுமோ அத்தனை மடங்கு வேகமாக ரயில்வண்டியைவிட பூமி சுழல்கின்றது. அது நம் எல்லோரையும் தாங்கிக் கொண்டு அத்தகைய வேகத்தில் தன்னைத் தானே சுழல்வது மட்டுமன்றி சூரியனைச் சுற்றி யும் ஓடிக்கொண்டிருக்கிறது சூரியனைச் சுற்றும் பொழுது அதன் வேகம் வேகமான ரயில்வண்டியைவிட அறுநூறு மடங்கு அதிகமாகும் இவ்வாறு பூமியானது இரண்டு விதமாக தலை தெரிக்க ஓடிக்கொண்டிருக்கும் சமயத்தில் நாம் பேசவும், விளையாடவும், போர் செய்யவும், கனவு காணவும், பிரார்த்தனை செய்யவும் செய்து கொண்டிருக்கிறோம் இதைவிட விநோதமான விஷயம் வேறு ஏதேனும் உண்டா? எல்லாவற்றிலும் விநோதமான காரியம் எது வென்றால், நாமோ இப்படி அபாயகரமான வேகத்தோடு ஓடிக்கொண்டிருக்கிறோம் அதேசமயத்தில் பிறர்க்குத் துன்பம் விளைவித்தால் நமக்கு இன்பம் விளையும் என்று எண்ணுகிறோமே அதுதான்.

இந்திய தேச சரித்திரம்

சில முக்கிய சம்பவங்கள்

இந்தியாவில் பிரிட்டிஷாரும் முஸல்மான்களும் ஆட்சி செய்த காலத்தையே நாம் பெரிதாக எண்ணுகிறோமேயன்றி, அவர்கள் ஆட்சிக்கு முன், நீண்ட நாள் ஆண்ட ஆட்சிகளைப் பற்றிச் சிந்திப்பதில்லை. இராமாயணத்தையும் மகாபாரதத்தையும் படித்தால் அந்த நூல்கள் எழுந்த காலத்திலும், அதற்கு முன்னரும் நம்முடைய ஜனங்கள் ஒழுங்காக ஆட்சி, கலைகள் வளர்ச்சி, வியாபாரப் பெருக்கம், கைத் தொழில் அபிவிருத்தி, கல்வி மிகுதி முதலிய அம்சங்களுடன் எத்துணை உயர்ந்த நாகரீகம் உடையவர்களாக இருந்தார்கள் என்பது தெரியவரும். அந்தக் காலத்து நாகரீகத்தைவிட நாம் அதிகமாய் பெற்று விட்டோமா என்பது கூடச் சந்தேகந்தான். அவர்கள் அப்படி உயர்ந்த நாகரீகம் உடையவர்களாயிருந்தது, மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்.

பிரிட்டிஷார் ஆட்சி நிலைநாட்டப் பெற்றது ஹேஸ்டிங்ஸ் பிரபு காலத்திலேயே அது முதல் இதுவரை பிரிட்டிஷ் ஆட்சி நடப்பதெல்லாம் நூறு ஆண்டுகளாகத்தான். ஆகவே நம்முடைய மொத்த சரித்திர காலத்துடன் பிரிட்டிஷ் ஆட்சி காலத்தை ஒப்பிட்டால், ஒருமணி நேரத்துக்கும், ஒரு நிமிஷ நேரத்துக்கு முள்ள வித்தியாசமே என்பது புலனாகும். ஆகவே நம்முடைய நாகரீக ஒரு மணியில் ஆங்கில ஆட்சி ஒரு நிமிஷமே.

கௌதம புத்தர் காலம் இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன் என்று சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள். அவருடைய வளர்ப்பு, சூழ்நிலை, அவருடைய துறவு, போதனை முதலிய விஷயங்களையும் அவருக்குப் பின் வந்த அரசர்களுடைய செயல்களையும் கவனித்தால் அந்தக் காலத்திலும் அதற்கு முன்னாலும் இந்த நாட்டில் எத்தகைய அரசாங்கம் நடைபெற்றது என்று தெரிந்து கொள்ளலாம். நாகரிகம், கலைகள், அரசாங்கம் முதலியவைகள் எல்லாம் எந்த நாட்டிலும் ஒரே நாளில் நிலைத்து விடமாட்டாது. மக்கள் பல்லாண்டுகளாக உழைத்தே அவைகளை உண்டாக்கி, வளர்த்து, உயர்ந்த நிலையை உடையதாக ஆக்கியிருப்பார்கள். ஆகவே, புத்தரையும் அவருடைய ஹிதோபதேசத்தையும் உண்டாக்க நம்முடைய நாடு எத்தனை ஆண்டுகள் உழைத்திருக்க வேண்டும் என்று எண்ணிப் பாருங்கள்.

இரண்டாயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன் அசோக மன்னருடைய பாட்டனார் இந்தியா மீது படையெடுத்து வந்த கிரேக்கர்களைத் துரத்தியடித்து விட்டுத் தம்முடைய ராஜதானியில் நகரசபை ஏற்படுத்தினார். அக்காலத்தில், நம் நாட்டுக்கு வந்திருந்த மெகாஸ்தனீஸ் என்னும் கிரேக்க அறிஞர், அந்த நகரசபை நிர்வாகத்தின் சிறப்பைக் குறித்து அதிகமாய்ப் புகழ்ந்துள்ளார். அவருடைய நூலைப் படிப்பது, இக்காலத்து நகரசபை அறிக்கை போன்றைப் படிப்பது போன்றதா யிருக்கிறது.

அசோகர் இரண்டாயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன் ஆட்சி செய்தார். அவருக்கு ஒப்பான மன்னர் இதுவரை உலகில் பிறக்கவில்லை என்று எல்லா அறிஞர்களும் ஒப்புக் கொள்கிறார்கள். உயர்ந்த நாகரிகமும், கொள்கையும் உடைய மக்களிடையேதான் அத்தகைய சிறந்த அரசர் பிறக்க முடியும். "பிற மதங்களைப் பற்றி இழிவாகப் பேசலாகாது" என்று அசோகர் கூறினார். இந்த ஒரு வாக்கியம் போதும், அந்தக் காலத்து நாகரீகத்தின் உயர்வை அறிந்து கொள்வதற்கு

வால்மீகி ராமாயண காலத்துக்கும், முஸல்மான்கள் வந்த காலத்துக்கும் இடையில் நாலாயிரம் ஆண்டுகள் கழிந்தன. இந்த நீண்ட காலத்தில் நாகரீகமே காணப்பட்டது. அப்படி உயர்ந்த நாகரீகம் இருந்திருக்குமானால் அது ஒழுங்கான ஆட்சி நடைபெற்றால்தான் சாத்தியமாகும். ஆதலால் இடையிடையே சண்டை சச்சரவுகள் நடைபெற்றிருந்த போதிலும், சமாதானமே அதிகமாக நிலவியிருக்க வேண்டும். அப்படியானால்தானே கல்வியும், கலையும், தத்துவமும், தர்மமும் செழித்து வளர முடியும்? இப்படி முஸல்மான்களுக்கு முன் நடைபெற்ற ஹிந்து சுயராஜ்ய ஆட்சிக் காலம், பிரிட்டிஷ் ஆட்சி காலத்தைப் போல, நாற்பது மடங்கு கொண்டதாகும். பாட்டி கம்பை ஊன்றிக் கொண்டு தள்ளாடி நடப்பதற்கும், இடையில் நிற்காமல் ஓடும் எக்ஸ்பிரஸ் ரயில் வண்டிக்கும் எத்தனை வேறுபாடு? நாற்பது மடங்கு என்பதன் பொருளை எளிதில் அறிந்து கொள்ளலாம்.

ஆகவே, நாம் பிரிட்டிஷ் ஆட்சியில் அடிமைகளாகி அதிக காலம் ஆகிவிடவில்லை. அதிக காலம் இருந்து விட்டது போலவும் அதனால் சுதந்திரத்தையே மறந்து விட்டது போலவும், சிலர் நடந்து கொள்கிறார்கள். ஆனால் விஷயத்தை நன்கு கவனித்தால் அப்படி எண்ணுவது எவ்வளவு அசம்பாவிதம் என்பது எளிதில் விளங்கும்.

ஒரு காலத்தில் பிரிட்டிஷார் ரோமர்களுக்கு அடிமைகளாக இருந்தார்கள். எத்தனைக் காலம் அப்படியிருந்தார்கள் என்று எண்ணுகிறீர்கள்? நானூறு ஆண்டுகள், பிரிட்டிஷ் ஆட்சிக்கு வேரூன்றிய கிளைவ் காலத்திலிருந்து இதுவரையுள்ள காலத்தை இரட்டிப்பாக்குங்கள், அவ்வளவு காலம் முஸல்மான்கள் மூன்று மடங்கு காலம் அரசாண்டார்கள். இந்த விஷயத்தை மனத்தில் ஊன்றுவது நல்லது.

முஸன்மான்கள ஆட்சிக் காலத்தை இரண்டு பகுதிகளாகப பிரிக்கலாம். ஒனறு பாபருக்கு முந்தியது; மற்றது முகலாய ஆட்சி நடைபெற்றது. பாபருக்கு முன அரசாணட முஸ்லீம் சகரவர்த்திகள, முனனூறு வருஷ காலம ஆட்சி செய்தார்கள முகலாயா 180 வருஷ காலம் ஆணடாாகள அதாவது ஆங்கி லேயர் இந்தியாவில் காலெடுதது வைததது முதல இதுவரை யுளள காலமதான்.

இபபடியிருநதும் ஏன் பிரிட்டிஷ ஆட்சிக்காலம் அதிக நீளமானதாகத தோனறுகிறது? நாம மரஙகளிடையே நினறு கொணடு, கோபுரததைப பாாததால மரஙகளே கோபுரததைவிட உயரமானவை போலத தோனறும மரஙகள கோபுரததை மறைதது விடவும செயயும. அதுபோல நாம பிரிட்டிஷ ஆட்சியிலே வசிததாலதான் அதிக நாள நடை பெறுவதாகத தோன்றுகிறது. கோகலே காலதது மககள ஆஙகில ஆட்சியே சாஸவதம எனறு எண்ணினாகள அதுபோலவேதான ஔரஙகஜீப காலதது மககள முகலாய ஆடசியேதான சாஸவதம் எனறு எணணியிருபபாாகள

மகாராஷடிராகள பாஜீராவ காலததிலிருநது நூறு வருஷ காலம இநதியாவில அரசாணடாாகள அதாவது ஹேஸடிஙஸ் காலததிலிருந்து இதுவரை எவவளவு காலமோ, அவ்வளவு காலம மகாராஷடிராகள வெறும கொளளைக் கூடடததாா என்று பாடசாலையில நமககுக கற்பிததாாகளோ, அது பொய். அவர்கள அபபடிப்பட்டவாகள அலலா நில அளவு முறை, நில வரி முறை போனற விஷயஙகள உளபட சகல அரசியல விவகாரஙகளும அறிநது, ஆடசி செயத மனனாகளே யாவா.

உலகமறிநத பெரிய ஹிந்து மனனாகளான, சந்திர குப்தரையும், விக்கிரமாதித்தரையும பாருஙகள. சந்திர குப்தர் ஆணடபின் 800 வருஷஙகள கழிததே விககிரமாதித்தர் அர

சாண்டார். விக்கிரமாதித்தனுக்குப் பின், 800 வருஷங்கள் ஹிந்து மன்னர் பலர் ஆட்சி செய்த பின்னரே, முகம்மது கோரி என்பவன் இந்தியா மீது படையெடுத்து வந்து தில்லி நகரத்தைக் கைப்பற்றினன்

இந்திய நாகரீகத்தைக் கவனித்தால் ஆதிகாலத்திலிருந்தே நமது ஜனங்கள் பிற மதங்களை இழிவாகக் கருதாமலும், பிற மதங்களைத் துன்புறுத்தாமலும் நடந்து வந்திருப்பது தெரிய வரும். ஆனால் பிரிட்டிஷ் தேசத்தில் பிற மதஸ்தரைத் துன்புறுத்துவது, 19-வது நூற்றாண்டு வரை நடந்து வந்தது 16-வது நூற்றாண்டில் ஆட்சி செய்த அக்பர் சக்ரவர்த்தி, சகல மக்களுக்கும் சம உரிமையும், சகல மதங்களுக்கும் சம அந்தஸ்தும் அளிப்பதாகப் பிரகடனம் செய்தார் அக்பர் சகல மதங்களிலும் உண்மை யிருப்பதாகக் கண்டார் என்றும், அவர் கடவுளை முஸ்லிமான போல வணங்கியது போலவே, சில சமயங்களில் ஹிந்து போலவும், சில சமயங்களில் பார்ஸிகள் போலவும், சில சமயங்களில் கிறிஸ்தவர்கள் போலவும், வணங்கினார் என்றும் சரித்திராசிரியர்கள் கூறுகிறார்கள் அவர் ஹிந்து மதத்தையும், இஸ்லாம் மதத்தையும் ஏக மதமாகச் செய்ய முயன்றார் ஆயினும் அதை ஏற்றுக் கொள்ளும்படி யாரையும் நிர்ப்பந்திக்கவில்லை அவர் மதங்களின் விஷயத்தில் அனுஷ்டித்த அரசாங்க விதிகள் எல்லாம் இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலும் முன்னூறு வருஷங்களுக்குப் பின்னரே கையாளப்பட்டது எல்லோரும் தத்தம் விருப்பம் போல கடவுளை வணங்கலாம் என்று அக்பர் சட்டம் செய்தார் அந்தச் சட்டம் ஐரோப்பாவில் அந்தக் காலத்திலும் கிடையாது. அதற்குப் பின்னர் வெகு காலம் வரைக்கும் கிடையாது ஆகவே, மத சுதந்திரம் என்பது நம்முடைய நாட்டுக்குப் புதிய தோர் விஷயமன்று ஆதிகாலம் தொட்டு அனுஷ்டிக்கப் பெற்று வந்த விஷயமேயாகும் அக்பர் பல மதங்களைச் சேர்ந்த போதகர்களுடைய பிரசங்கங்களைத் தமது கொலு மண்டபத்தில் கேட்டுக் கொண்டிருந்த அதே சமயத்தில், இங்கிலாந்து மன்னர்கள், மத வித்தியாசம் காரணமாகப் பாதிரிமார்களை நெருப்பிலிட்டுக் கொளுத்திக் கொண்டிருந்தார்கள்.